பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 | வள்ளுவர் ஆண்டு 2051 | தை 02 வியாழக்கிழமை 16.01.2020 | கதிர் 72


### இது ரகசியம் அல்ல!

தென்னிலங்கை அரசியல்வாதி ஒருவரை நேற்றுச் சந்தித்தேன். ஒரு கட்சி சார்ந்தவர் என்றாலும் நடுநிலையாகவும் பேசக்கூடியவர்.

“உங்கள் தமிழ் எம்.பிமாருக்குச் சிங்களம் தெரியாதமை நல்லதுதான். தப்பி பக்கம் 02

# இராணுவக் கண்காணிப்பின் கீழ் தமிழரை வைத்திருக்கத் திட்டம்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு



வவுனியா, ஜன. 16

இனப்படுகொலையைச் செய்தவர்கள் அரச நிர்வாகங்களில் உயர் பதவிகளை பெற்றிருக்கிறார்கள். இராணுவக் கண்காணிப்பின் கீழ் தமிழ் மக்களை வைத்திருக்க விரும்புகிறார்கள் என்பதே அதற்கான காரணம். இது தமிழ் மக்களின் வாழ்வியலில் பிரச்சினையை ஏற்படுத்தி நிற்கின்றது.

–இவ்வாறு குற்றம் சாட்டியிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன். பக்கம் 03


## பிரிட்டன் பிரதமர் பொங்கல் வாழ்த்து



கொழும்பு, ஜன.16

உலகெங்கிலும் பரந்து வாழும் தமிழ்ச் சொந்தங்களுக்கு தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார் பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன். பக்கம் 03

## வல்வைப் பட்டப் போட்டியில் ஆயிரக்கணக்கானோர் திரள்வு



யாழ்ப்பாணம், ஜன. 16

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நேற்று வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரையில் பட்டப் போட்டி நடத்தப்பட்டது. இம்முறை பல்லாயிரக் பக்கம் 03

## விக்னேஸ்வரன் கட்சியின் சின்னம் பொங்கல் பானை



### தைப்பொங்கல் நாளில் அறிவித்தார்

யாழ்ப்பாணம், ஜன.16

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியின் சின்னமாகப் பொங்கல் பானை அறிவிக்கப்பட்டுள்ளது. பக்கம் 03

## குறைந்த வருமானம் பெறுவோர் சலுகை விலையில் பொருள்களைப் பெறுவதற்கு இலத்திரனியல் அட்டை



கொழும்பு, ஜன.16

குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருள்களை வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றை பக்கம் 03

## ரணிலுக்கேதான் தலைமைப் பதவி!

### ஏற்கமுடியாதோர் வெளியேறலாம் என்கின்றார் வஜிர அபேவர்தன



கொழும்பு, ஜன. 16

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை சஜித் பிரேமதாஸவுக்கு வழங்க மறுப்பதாயின் புதிய கூட் பக்கம் 02

## உறவுகளின் உரிமைகளை நினைவிற்கொண்டே ஓ.எம்.பி. சட்டத்தைப் பரிசீலனை செய்யவேண்டும்

### அதன் தலைவர் சாலிய பீரிஸ் கருத்து

கொழும்பு, ஜன. 16

காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் சட்டத்தை மீள்பரிசீலிக்க அரசு நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர், தமது உறவுகளைத் தேடும் குடும்பங்களுக்கு உள்ள உரிமையையும் நினைவிற்கொள்ள பக்கம் 03

## கோட்டாவின் கைக்கு வந்தது ட்ரம்பின் மிகமுக்கிய கடிதம்!



கொழும்பு, ஜன.16

இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயரதிகாரி அலிஸ் வெல்ஸ் பக்கம் 03

## ரஞ்சன் ராமநாயக்கவுக்கும் மனநல பரிசோதனையாம்




கொழும்பு, ஜன. 16

சுவீஸ் தூதரக ஊழியரைப் பரிசோதித்தது போன்று, நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை பக்கம் 03

## யாழ்.நகர் கொட்டடியில் இருவர் மீது வாள்வெட்டு!

### மோ. சைக்கிள்களைக் கைவிட்டு தப்பி ஓடியது வன்முறைக் கும்பல்



யாழ்ப்பாணம், ஜன.16

யாழ்ப்பாணம் மாநகர் கொட்டடியில் வாள்களுடன் வந்த கும்பல் ஒன்று இருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளது. தாக்குதலையடுத்து ஊரவர்கள் துரத்திச் பக்கம் 03

## அமெரிக்கா அழுத்தம் கொடுக்கவில்லையாம்!

கொழும்பு, ஜன. 16

அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிறுவனத்துடனான (எம்.சி. சி) ஒப்பந்தம் குறித்து அமெரிக்கத் பக்கம் 03

# கல்வித் தகைமைகளற்ற ஒரு லட்சம் பேருக்கு தொழில் வழங்கும் பணி மிக விரைவில் ஆரம்பம்

## தகுதியானோரைத் தெரிவு செய்வதில் படைத் தரப்புக்கும் பங்கு

கொழும்பு, ஜன. 16

'சுபீட்சத்தின் நோக்கு' – என்ற ஜனாதிபதித் தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல்நோக்கு அபிவிருத்தி செயலணிக்குக் குறைந்த வருமானம் பெறும் மற்றும் தொழிற்திறனற்றவர்களுக்கு ஒரு லட்சம் தொழில்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் திட்டமிடல்கள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளன.

அந்த வகையில் ஜனவரி 20 ஆம் திகதிக்கு முன்னர் இந்த ஆள்சேர்ப்பு முறை மற்றும் அதற்கான விண்ணப்பங்கள் குறித்து அறிவிக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

மிகவும் வறிய நிலையில் உள்ள சமூர்த்தி உதவி பெறும் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் தகுதி பெற்றிருந்தும் சமூர்த்தி உதவி கிடைக்காத குடும்பங்களின் வாழ்வாதார நிலைமைகளைக் கட்டியெழுப்புவது இந்தப் பல்நோக்கு அபிவிருத்தி செயலணியின் நோக்கமாகும்.

அத்தகைய குடும்பங்களில் தொழிற் படையணிக்குப் பங்களிப்புச் செய்யக்கூடியவர்களை இனம் கண்டு அவர்களுக்குப் பொருத்தமான துறைகளில் 6 மாத காலப் பயிற்சியின் பின்னர் நிலையான தொழில் வாய்ப்பு வழங்கப்படும். அவர்கள் வதியும் பிரதேசங்களிலேயே தொழில் வாய்ப்புகள் வழங்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எவ்வித கல்வித் தகைமைகளையும் கொண்டிராத அல்லது குறைந்த கல்விமட்டத்தில் உள்ள, பயிற்றப்படாதவர்கள் இதற்காக தெரிவுசெய்யப்படவுள்ளனர். முழு நாட்டையும் உள்ளடக்கிய வகையில் முதலாம் கட்டத்தின் கீழ் ஒரு லட்சம் தொழில்கள் வழங்கப்படவுள்ளன. இந்த விடயங்களை நெறிப்படுத்துவதிலும் முகாமைத்துவம் செய்வதிலும் பட்டதாரிகள் மற்றும் உயர் கல்வி பெற்றவர்களுக்கு தொழில் வாய்ப்புகள் கிடைக்கவுள்ளன.

ஒவ்வொரு பிரதேச செயலாளர்பிரிவிலும் 300க்கும் 350க்கு இடைப்பட்டவர்கள் இதன் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர்.

விகாரைகளின் நாயக தேரர், ஏனைய சமயத் தலைவரொருவர், மாவட்ட செயலாளர்கள், கிராம சேவையாளர் உள்ளிட்ட கள அலுவலர்களின் கண்காணிப்பின் கீழ் தகைமையுடையவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தெரிவு முறை சரியாக இடம்பெறுவதை உறுதிசெய்வதற்காக பாதுகாப்பு தரப்பில் திறமையான சிலரையும் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தகைமை பெறுவோர் பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் அரச நிறுவனங்களில் கல்வித்தகைமை தேவைப்படாத தொழில்களுக்காக நியமிக்கப்படுவர்.

தச்சுத் தொழில், விவசாயம், மீன்பிடி, வனப்பாதுகாப்பு போன்ற துறைகளுக்காகவும் அந்தந்த பிரதேசங்களுக்கு அவசியமான வகையில் பயிற்சிகளை வழங்கி சேவையில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சு மற்றும் முப்படைகளின் கண்காணிப்பின் கீழ் ஆள்சேர்ப்பு மற்றும் பயிற்றுவிப்பு இடம்பெறும் – என்றுள்ளது. (ஐ)

# உறுப்பினர்கள் சிலருக்கு எதிராக நடவடிக்கைக்கு தயாராகிறது சு.க.

கொழும்பு, ஜன.16

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிலருக்கு எதிராக இன்று கூடவுள்ள கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எஸ்.பி. திஸாநாயக்க, டிலான் பெரேரா, லக்ஸ்மன் யாபா அபேவர்ன மற்றும் விஜித் விஜேமுனி சொய்சா ஆகியோருக்கு எதிராகவே இவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. இவர்கள் இக்கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

இது தவிர, 25 பிரதேச சபை உறுப்பினர்களுக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, எதிர்வரும் பொதுத் தேர்தல் குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# எரிபொருள் விலை விரைவில் எகிறும்?

கொழும்பு, ஜன.16

எரிபொருள் விநியோகத்தில் நஷ்டத்துடனேயே அரசாங்கம் செயற்படுவதாகவும் இதனால், எதிர்வரும் நாள்களில் எரிபொருள் விலை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன எனவும் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலை காரணமாக எரிபொருள் நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளதாகவும் இந்த நிலைமையை கட்டுப்படுத்த இலங்கை அரசாங்கத்துக்கு முடியாதுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனால், எதிர்வரும் நாள்களில் சிலசமயம் அரசாங்கத்துக்கு எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டி ஏற்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தொன்மைச் சின்னம் தெருமூடி மடம் புனரமைக்கப்பட்டு திறக்கப்பட்டது!



யாழ்ப்பாணம், ஜன. 16

பருத்தித்துறையிலுள்ள தொன்மையான தெருமூடிமடம் புனரமைக்கப்பட்டு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையிலுள்ள இந்த மடமே, தெரு மூடி மடமாக இலங்கையில் உள்ள ஒரேயொரு மடமென்பது குறிப்பிடத்தக்கது.

தொல்லியல் அடையாளமாக இதனைப் பாதுகாக்க வேண்டுமென்ற ஆர்வம் தொல்லியல் திணைக்களத்திடம் காணப்படவில்லையென்ற குற்றச்சாட்டு ஏற்கனவே பரவலாக எழுந்திருந்தது. அந்த வீதியால் பயணித்த பாரவூர்திகளால் தெருமூடி மடம் சேதமடைந்திருந்தது. அதை பாதுகாக்க, புனரமைக்க தொல்லியல் திணைக்களம் நடவடிக்கையெடுக்கவில்லை.

இதையடுத்து, பருத்தித்துறை நலன்புரிச் சங்கத்தின் சுவிஸ் கிளைத் தலைவர் குமரன், இப்புனரமைப்புக்கான நிதியினை முழுமையாக வழங்கியிருந்தார். இதன்மூலம், புனரமைக்கப்பட்ட தெருமூடிமடம் புதுப்பொலிவுடன் திறந்து வைக்கப்பட்டது. (ஐ-07)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*விட்டார்கள். இல்லையேல் மாட்டியிருப்பார்கள். அவர்கள் நிலைமையும் சந்தி சிரிப்பதாக மாறியிருக்கும்"* – என்றார்.

எனக்கு விளங்கவில்லை. என்ன, ஏது என்று விசாரித்தேன்.

*"ரஞ்சன் ராமநாயக்கா விடயம்தான் இப்போது தென்னிலங்கையில் கொடிகட்டிப் பறக்கும் விவகாரம். ஒவ்வொருவருடனும் ஒவ்வொரு தினுசில பேசியிருக்கிறார். உங்கள் எம்.பிமாருக்குத் தமிழையும் ஆங்கிலத்தையும் தவிர வேறு மொழி தெரியாது. சிங்களம் சரளமாகப் பேச மாட்டார்கள். ரஞ்சன் ராமநாயக்காவுக்கு சிங்களம் தவிர வேறு எதுவும் தெரியாது. ஆங்கிலம், தமிழ் சுட்டுப்போட்டாலும் விளங்காது. அதனால் கொச்சை ஆங்கிலத்தில் கூட உங்கள் எம்.பிமாருடன் அவரால் பேசமுடியாது. அதனால் உங்கள் தமிழ் எம்.பிக்கள் மற்றும் தலைவர்கள் – சம்பந்தனில் இருந்து சுமந்திரன் வரை எல்லோரும் –தப்பி விட்டார்கள். அதுவும் ரஞ்சன் ராமநாயக்காவின் ஐ.தே.கவும் உங்களின் கூட்டமைப்பும் கடந்த அரசில் கொண்டிருந்த தேனிலவு உறவில் ரஞ்சன் ராமநாயக்கா புகுந்து விளையாடியிருப்பார். இரு தரப்புக்கும் பொதுவான மொழி ஊடகம் இல்லாததால் தமிழ் எம்.பிக்கள் தப்பி விட்டார்கள்"* – என்று பொறாமைப் போக்கில் கருத்து முன்வைத்தார் அவர். நான் கொக்கட்டம் விட்டுச் சிரித்தேன்.

*"பொதுத் தேர்தலை இலக்கு வைத்துத்தான் தற்போது பொதுஜன பெரமுனவும் தமிழ்க் கூட்டமைப்பும் காய் நகர்த்துகின்றன"*– என்றும் அவர் குறிப்பிட்டார்.

*"பொதுஜன பெரமுன காய் நகர்த்துகின்றது என்பது சரி. கூட்டமைப்பு என்ன காய் நகர்த்துகின்றது?"* – என்று நான் கேட்டேன். அவரின் விளக்கத்தைக் கேட்டு நான் சற்று அதிசயித்துத்தான் போனேன்.

*"கோட்டா அரசு இனவாதம் பேசுகின்றது. அதனால் அதற்கு இன்றைய நிலையில் தெற்கில் ஆதரவு பட்டையைக் கிளப்புகின்றது. போதாக்குறைக்கு உங்கள் தரப்பில் நீதியரசர் விக்னேஸ்வரனும் கஜேந்திரகுமாரும், கூட்டமைப்பின் சில பிரமுகர்களும் (அவர் சிவாஜிலிங்கம் இன்னமும் கூட்டமைப்பில் இருப்பதாகக் கருதி அவரின் பெயரையும் அனந்தியின் பெயரையும் குறிப்பிட்டார்) வெளியிடும் தீவிரத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக் கருத்துகள் தெற்கில் ராஜபக்ஷக்கள் அணிக்கு வாக்குகளை அள்ளிக்கொட்ட வழி செய்கின்றன"* – என்றார் அவர். நான் தலையசைத்தேன்.

*"தெற்கில் அதுதான் நிலைமை என்றால், வடக்கில் நிலைவரம் சற்று மாறுபாடானது. கோட்டாபய ராஜபக்ஷ தரப்பின் தீவிர பௌத்த, சிங்கள நிலைப்பாட்டால் தமிழ் வாக்காளர்கள் கலங்கிப்போயிருக்கின்றார்கள். என்னதான் வீரம் மிக்க விடுதலைப் புலிகள் இயக்கம் உருவான இனம் என்றாலும் இன்று யுத்தத் தோல்வியினால் அது துவண்டு போய்க் கிடக்கின்றது, விக்கியினதும், கஜேந்திரகுமாரினதும் தமிழ்த் தேசியத் தீவிரப் போக்கு தமிழ் வாக்காளர்களைப் பொறுத்தவரை வாசிப்பதற்கும், பேசுவதற்கும், கொள்கைப் பற்றைப் புகழ்வதற்கும் சிறப்பாக இருந்தாலும், கோட்டாபய போன்ற தீவிர பௌத்த, சிங்களப் போக்குடன் நெற்றி முட்ட மோதும் வலிமையான – உறுதியான – தீவிரமான – நிலையில் அவர்கள் இல்லை. மலை போல விஸ்வரூபம் எடுத்திருக்கும் தென்னிலங்கை பௌத்த, சிங்களத் தேசியவாதத்தை தந்திரோபாயமாக அணுகி, முறியடிப்பதே புத்திசாலித்தனம். நெற்றி முட்ட மோதி இருப்பதையும் இழந்து விடக் கூடாது என்பதுதான் தமிழர்களின் எண்ணம். ஆக, தென்னிலங்கையில் அரசுத் தலைவர்கள் தமிழ்த் தேசியத்தை முறியடிக்கும் தீவிர, பௌத்த, சிங்கள நிலைப்பாட்டை மேலும் மேலும் இறுக்க, தமிழ் மக்கள் வேறு வழியின்றித் தமிழ்க் கூட்டமைப்புக்குப் பின்னால்தான் ஒன்று திரள்வார்கள்; அதிதீவிர தமிழ்த் தேசியம் பேசும் தரப்புகளின் பின்னால் அல்ல.*

*'ஆக, ஒரு புறம் விக்கியும், கஜேந்திரகுமாரும் சேர்ந்து கோட்டா தரப்புக்கு பின்னால் சிங்கள மக்கள் திரள்வதற்கு உதவ, மறுபுறம் அதே விக்கியும், கஜேந்திரகுமாரும், தென்னிலங்கைத் தரப்பினரும் தனித்தனியாகக் கூட்டமைப்புக்குத் தமிழர்கள் மத்தியில் செல்வாக்கை உயர்த்திவிடப் போகின்றனர்.*

*"எனவே நாடாளுமன்றத் தேர்தலும், தெற்கில் கோட்டா தரப்பும், வடக்கு – கிழக்கில சம்பந்தன் தரப்பும் என்று இணங்கிப் போக இயலாத இரண்டு எதிர் எதிர்த் தரப்புகளை அரசியல் களத்தில் மேல் மட்டத்துக்கு நெட்டித் தள்ளிக்கொண்டு வரப் போகின்றன என்பது நிச்சயம்"*

– எனத் தனது கணக்கீட்டை விலாவரியாக விளக்கினார் அந்த அரசியல்வாதி.

அவர் சொல்வதும் சரிபோலத்தான என் மனதுக்குப் பட்டது. அப்படித்தான் வடக்கு, கிழக்கிலும் மறுபுறம் தெற்கிலும் மக்களின் மனவோட்டம் காணப்படுகின்றது போல எனக்குத் தோன்றுகின்றது. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே?

– மின்னல்–

## ரணிலுக்கேதான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டணி அமைப்பதாகக் கூறுபவர்களுக்குக் கட்சியில் எந்தவித தடையும் இல்லையெனவும், அவ்வாறு தீர்மானம் எடுப்பவர்கள் கட்சியின் அரசியல் யாப்புக்கு எதிராக செயற்பட்டவர்களாகக் கருதப்படுவார்கள் எனவும் அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

சிறிகொத்தா கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித்துக்கு பௌத்த வாக்குகள் இல்லையென நாம் தெளிவாகக் கூறினோம். அதற்குப் பல காரணங்கள் இருந்தன. இருப்பினும், கட்சியிலுள்ள ஒரு குழுவினர் அவருக்குத்தான் பௌத்த வாக்குகளைப் பெற முடியும் எனப் பிடிவாதம் பிடித்தனர். இதனால், அந்தவாய்ப்பை அவருக்குக் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வழங்கினோம். பிரதிபலனையும் கண்டோம்.

இதனால், தற்போது பௌத்த வாக்குகளைப் பெறுவதற்கான பணியை ரணில் விக்கிரமசிங்கவுக்கு விடுமாறு இப்போது கேட்டுக் கொள்கின்றோம். இதனை மறுப்பவர்கள் கட்சியிலிருந்து வெளியே செல்லலாம். இல்லாவிடின், சஜித்துக்கு வேட்பாளர் பதவியை வழங்கியதனால் தவறிப்போன பௌத்த வாக்குகளை ஈடுசெய்வதற்கு கட்சியிலிருந்து நடவடிக்கை எடுக்கலாம் – என்றார். (ஐ)

## இராணுவக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாம் எதிர்பார்த்தது போல புதிய அரசு ஓர் இராணுவச் சிந்தனையுடன் செயற்படுவது தெளிவாகத் தெரிகிறது. சிவில் நிர்வாகங்களில் இராணுவப் புலனாய்வாளர்களின் செயற்பாடு பரவலாகிக் காணப்படுகின்றது.

இனப்படுகொலையைச் செய்தவர்கள் அரச நிர்வாகங்களில் உயர் பதவிகளை பெற்றிருக்கிறார்கள். இராணுவ கண்காணிப்பின் கீழ் தமிழ் மக்களை வைத்திருக்க விரும்புகிறார்கள் என்பதே அதற்கான காரணம். இது தமிழ் மக்களின் வாழ்வியலில் பிரச்சனையை ஏற்படுத்தி நிற்கின்றது.

13ஆவது திருத்தம் தொடர்பாக சிந்திப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஆனால் அதீஉயர் அதிகாரத்தை பெற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 13 ஆவது திருத்தத்தில் உள்ள பல விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறுகிறார். குறிப்பாக காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றிச் சிந்திக்கவே முடியாது எனக் கூறியிருக்கிறார்.

எனவே தம்பி வழங்க முடியாது எனக் கூறுகிறார். அண்ணன் வழங்க முடியும் எனக் கூறுகிறார். இது முன்னுக்குப் பின் முரணான செய்திகளாக இருக்கின்றன. தேர்தலை நோக்கிய வார்த்தைப் பிரயோகமாக தான் நான் அதைப் பார்க்கிறேன்.

போரின் போது சர்வதேச நாடுகளை நாடித் தமது விடயங்களைச் சாதித்துகொண்டவர்கள், சர்வதேசத்திற்கு நேரடியாகவே வாக்குறுதிகளை வழங்கியிருக்கிறார்கள், பான் கீ மூனுடன் இணைந்து கூட்டறிக்கையை விட்டிருக்கிறார்கள்.

சர்வதேசத்துடன் சேர்ந்து ஈழ விடுதலை போராட்டத்தை இல்லாமல் செய்துவிட்டு தற்போது மட்டும் சர்வதேசத்திடமும் இந்தியாவிடமும் ஏன் போகின்றீர்கள் என்று மஹிந்த கேட்கின்றார். போர் நடந்தபோது அந்த வாதத்தை அவர் கூறியிருக்க வேண்டும். இன்று தமிழர்கள் நிர்க்கதியான நிலையில் இருக்கும் போது இந்தக் கருத்தை சொல்லுவது நியாயமான அரசியல்வாதிக்கு பொருந்தாது.

சர்வதேச இராஜதந்திரிகள் இங்கு வருவது அவர்களின் நலன்களை முன்னிறுத்தியதாகதான் இருக்கும். ஆட்சி மாற்றம் இடம்பெற்ற நிலையில் சர்வதேசம் இங்கே வருகிறது என்றால் அவர்களது சுயநலன்களிற்காகவே வருகிறார்கள் என்பதே உண்மை.

மாறாக தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில் இவர்கள் செயற்படுவார்களாக இருந்தால் அது உலக அரசியலில் நியாயபூர்வமான சிந்தனையாக இருக்கும் – என்றார். (ஐ)

## பிரிட்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் திருநாளான தைப் பொங்கல் தினத்தில் அவர் டுவிட்டரில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது :-

எங்கள் அருமையான பிரிட்டன் தமிழ் சொந்தங்களுக்கும், உலகு எங்கிலும் பரந்து வாழும் தமிழர்களுக்கும் மகிழ்ச்சியான தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். – என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## குறைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தகுதிபெறும் அனைவருக்கும் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்ய சிறப்பு இலத்திரனியல் அட்டையொன்றும் வழங்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஊடகப் பிரிவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சமூர்த்தி உதவி பெறுவோர், சமூர்த்தி உதவி கிடைக்கப் பெறாதவர்கள், நிலையான தொழில் இல்லாதவர்கள், பெருந்தோட்டத் துறை தொழிலாளர்கள், தொழில் இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த அங்கவீனமுற்றோர், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், நிலையான வருமானம் இல்லாத முதியோர்கள் மற்றும் கடுமையான நோயாளிகள் உள்ள குடும்பங்கள் இத்திட்டத்திற்கு தகுதி பெறுவார்கள். அவர்களது உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

சீனி, தேயிலை, அரிசி, மா, பருப்பு, கடலை, வெங்காயம், மிளகாய், கருவாடு, கிழங்கு மற்றும் பால் மா உள்ளிட்ட அத்தியாவசிய நுகர்வுப் பொருள்களை நிவாரண விலையில் வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

சதொச, கூட்டுறவு விற்பனை வலையமைப்பு மற்றும் குறிப்பாக கிராமிய பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட அனுமதியளிக்கப்பட்ட விற்பனை நிலையங்களின் ஊடாக உணவுப் பொருள்களை இலகுவாக கொள்வனவு செய்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்படும் குறைந்த வசதிகளைக் கொண்ட கிராமிய விற்பனை நிலையங்களுக்கு நிவாரண அடிப்படையில் குளிர்சாதனப் பெட்டி உள்ளிட்ட உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளவும் வசதிகள் செய்யப்படவுள்ளன.

இந்த விற்பனை நிலையங்களை மக்கள் செறிந்து வாழும் பிரதேங்கள், குறைந்த வருமானம் பெறும் வீட்டுத் தொகுதிகள், கிராமிய பகுதிகள் மற்றும் பெருந்தோட்டத்துறையை உள்ளடக்கும் வகையிலும் அமைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அனுமதியளிக்கப்பட்ட வியாபார நிலையங்களைத் தெரிவுசெய்யும் போது பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

இதன் மூலம் சிறியளவிலான வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கும் ஜனாதிபதி எதிர்பார்த்துள்ளார். சுதேச உற்பத்தியாளர்களுக்கு முன்னுரிமையளித்து, அவர்கள் உற்பத்தி செய்யும் பொதிசெய்யப்பட்ட உணவு, வாசனை திரவியங்கள், இறைச்சி, மீன் முட்டை மற்றும் ஏனைய வீட்டுத் தேவைகளைக் குறித்த வியாபாரிகளுக்குத் தரகர்கள் இன்றி நேரடியாகவே வழங்குவதற்கும் இந்தத் திட்டத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்ததாக கிராமிய தோட்ட மற்றும் நகரப் பிரதேசங்களில் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் வீடுகளுக்கு குடிதண்ணீர் வழங்கவும், ஒரு லட்சம் கி.மீ. கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறுவோர் என இனங்காணப்படுவோருக்குக் காணி அமைச்சு, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் பிம் சவிய வுடன் இணைந்து விவசாயம், வியாபார அபிவிருத்தி மற்றும் வீட்டுத் திட்டத்திற்காக முப்பது வருட குத்தகை அடிப்படையில் ஒரு லட்சம் காணித் துண்டுகளை வழங்கவும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் – என்றுள்ளது. (ஐ)

## அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணைச்செயலர் அலைஸ் வெல்ஸ் அரசுக்கு எவ்வித அழுத்தங்களையும் பிரயோகிக்கவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இரு நாட்டு மக்களின் அபிப்பிராயங்களுக்கு முரணாக எவ்வித ஒப்பந்தங்களையும் செய்து கொள்ள முடியாது எனத் துணைச் செயலர் குறிப்பிட்டமை வரவேற்கத்தக்கது.

கடந்த திங்கட்கிழமை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்கத் துணைச்செயலர் அலைஸ் வெலஸ் மிலேனியம் சவால் ஒப்பந்தம் குறித்து அரசுக்கு அழுத்தம் பிரயோகித்தார் எனவும், அரசு அதற்கு எவ்வித பதிலும் குறிப்பிடவில்லை எனவும் பொய்யான செய்திகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகின.

இவ்விடயம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு குறித்து தெளிவுப்படுத்தவேண்டியது அவசியமாகும். அமெரிக்காவின் இராஜதந்திரிகள் நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டால் அதனை மாறுப்பட்ட அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்வது முற்றிலும் தவறானதாகும்.

தற்போது விஜயம் மேற்கொண்ட அமெரிக்க துணைச் செயலர் எம்.சி.சி ஒப்பந்தம் குறித்து எவ்விதமான அழுத்தங்களையும் அரசுக்குப் பிரயோகிக்கவில்லை. இவ்வொப்பந்தம் குறித்து முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை அவர் நன்கு அறிந்துள்ளார் – என்றார். (ஐ)

## ரஞ்சன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் மனநல வைத்தியர் ஒருவரிடம் அனுப்பி பரிசோதிக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ரஞ்யன் ராமநாயக்க நாடாளுமன்றத்திலுள்ள 224 பேரையும் பரிசோதனைக்குட்படுத்தவேண்டும் எனக் கூறியிருந்தார். இப்போது, ரஞ்சனின் நிலனுக்காகவும், நாட்டின் நலனுக்காகவும், நாடாளுமன்றத்திலுள்ள 224 பேரின் நிலனுக்காகவும் அவரைப் பரிசோதிப்பதே சிறந்தது.

அவர் தனது நோய் குறித்து அறியாதவராகவும் இருக்கக்கூடும். ஏனெனில், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் யாரும், தான் பாதிக்கப்பட்டுள்ளேன் எனக் கூறியது கிடையாது. இவரும் அப்படியாக இருக்கலாம் – என்றார்.

## உறவுகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள ஜனாதிபதி சட்டத்தரணியும் காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் தலைவருமான சாலிய பீரிஸ் இந்த வேண்டுகோளை அரசிடம் விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

2016ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (தாபித்தலும், நிர்வகித்தலும் பணிகளை நிறைவேற்றலும்) சட்டத்தை அரசு மீள்பரிசீலிக்க முயற்சி எடுக்கவுள்ளதெனச் சமீபத்திய ஊடக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நீதி மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோருடன் 09 ஜனவரி 2020 ஆம் திகதியிடப்பட்ட கடிதங்களின் மூலம் உத்தியோகபூர்வமாக தொடர்புகொண்டது.

அரசுடனான தனது தொடர்புகளில் காணாமற்போனோர் அலுவலகமானது, காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரினது குடும்பங்களின் நீண்டகால கோரிக்கைகளின் அங்கீகாரமாகவும், காணாமற்போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோருடன் தொடர்புடைய பிரச்சினைகளை வெளிப்படுத்துவதில் கடந்த அரசுகள் பொறிமுறைகளில் கண்ட தோல்விகளையும் பரிந்துரைகளையும் வெளிப்படுத்துவதற்குமாகவே காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகம் தாபிக்கப்பட்டது என மேற்கோளிட்டு காட்டியுள்ளது.

சிவில் யுத்தம் மற்றும் தெற்குப் பகுதி கிளர்ச்சிகள் உள்ளடங்கலாக பல்வேறு காரணிகளினால் கடந்த நான்கு தசாப்தங்களாக பரவலான காணாமற்போதல்களினால் இலங்கையானது பெரும் வேதனைக்குள்ளாகியுள்ளது என்பதையும் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் மீள நினைவூட்டியது.

2011ஆம் ஆண்டிலான கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை போன்ற முன்னைய பொறிமுறைகள் என்பவை காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களுடன் தொடர்புடைய பிரச்சினைகளை விசாரிக்க பரந்த பணிப்பாணை மற்றும் வலுவான விசாரணை தத்துவங்களுடன் சுயாதீனமானதொரு விசாரணை ஆணைக்குழுவை அமைக்க பரிந்துரைத்துள்ளன என்பதையும் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

எந்தவொரு திருத்தமும் நாடாளுமன்றினாலேயே இயற்றப்படவேண்டுமெனினும் சட்டத்திற்கு திருத்தங்களை பிரேரிப்பது அரசின் தனியுரிமை என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

காணாமற்போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரது குடும்பங்கள் மற்றும் அத்தகைய குடும்பங்களுடனும் காணமற்போனோர் அலுவலகத்துடனும் பணியாற்றும் நிறுவனங்களினதும் பரந்த ஆலோசனைகளைப் பின்பற்றியனவாகவே பிரேரிக்கப்படவுள்ள சட்டத்திற்கான திருத்தங்கள் அமைந்திருக்க வேண்டுமென காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நம்புகிறது.

அவ்வாறு செய்யும் பொழுது காணாமற்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட தனது அன்புக்குரியவர்களின் நிலை என்னவென்பதை தெரிந்துக்கொள்ள அக்குடும்பங்களிற்கு உள்ள உரிமையையும் குடும்பங்களின் தேவைகளையும் மனம் கொள்ளுதல் அவசியமாகுமெனவும் கருதுகின்றது– என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வல்வைப் பட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணக்கான மக்கள் பங்கேற்றுப் பட்டப் போட்டிகளை பார்த்து மகிழ்ந்தனர்.

இந்தப் போட்டியில் வித விதமான முறைகளில் வடிவமைக்கப்பட்ட பட்டங்கள் ஏற்றப்பட்டன.

அதில் பிரசாந் என்பவரின் மூன்று பட்டங்களும் முதல் மூன்று இடத்தைப் பிடித்தன. (ஐ)

## விக்னேஸ்வரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அறிவிப்பை கட்சியின் பொதுச் செயலாளரான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், தனது பொங்கல் வாழ்த்துடன் விடுத்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பொங்கல் பானையின் பொங்கல் வாழ்த்துக்கள்.

உலகம் வாழ் எனது இனிய தமிழ் உறவுகளுக்கு பொங்கல் பானை சார்பில் எனது மனம் ரர்ந்த பொங்கல் வாழ்த்துக்களை உழவர் திருநாளாம் இன்று மதம், குலம், நாடு கடந்து சகல தமிழ்ப் பேசும் உறவுகளுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொங்கல் பானை தமிழ் மக்கள் கூட்டணியின் சின்னம் என்பதை நான் சொல்லி எனது இனிய உறவுகள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை – என்றுள்ளது. (ஐ–07)

## யாழ். நகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றபோது 3 மோட்டார் சைக்கிள்களைக் கைவிட்டு கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் கொட்டடி வைரவர் கோவிலடியில் நேற்றிரவு 8 மணியளவில் இடம்பெற்றது.

படுகாயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

3 மோட்டர் சைக்கிள்களில் வந்த ஏழுக்கு மேற்பட்டோர் அடங்கிய கும்பல் ஒன்றே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது. அவர்கள் பொம்மைவெளியைச் சேர்ந்தவர் எனச் சந்தேகிக்கப்படுவதாகக் கொட்டடி இளைஞர்கள் தெரிவித்தனர்.

வன்முறைக் கும்பல் கைவிட்டுச் சென்ற 3 மோட்டார் சைக்கிள்களும் கொட்டடியைச் சேர்ந்தவர்களால் சேதமாக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ–07)

## கோட்டாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தபோது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கடிதம் ஒன்றை அவரிடம் கையளித்தார்.

எனினும் அதன் உள்ளடக்கம் தொடர்பில் தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.

இதேவேளை, சந்திப்புக்குப் பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அலிஸ் வெல்ஸ், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தாம் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடினார் எனவும், மிலேனியம் சவால் உடன்படிக்கை, மனித உரிமைகள் மற்றும் பிராந்தியப் பிரச்சினைகள் என்பன தொடர்பாகக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன எனவும் தெரிவித்தார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## விரைவில் காணாமல் போகும் காணாமல்போனோர் அலுவலகம்

இந்த நாட்டை சுமார் மூன்று தசாப்த காலங்கள் பீடித்து உலுப்பிய உள்நாட்டுப் போர் – இனவாத யுத்தம் – ஆயுத முனையில் இலங்கை அரசுப் படைகளினால் வெற்றி கொள்ளப்பட்டமையோடு முடிவுக்கு வந்து விட்டது என அறிவிக்கப்பட்டதாயினும் அது ஏற்படுத்திய பேரதிர்வு இன்னும் ஓய்ந்து விடவில்லை. தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

யுத்தத்தின் சத்தம் அடங்கி விட்டது. கனன்று கொண்டிருந்த துப்பாகிகளும் பீரங்கிகளும், ஷெல் சுடு குழல்களும் ஓய்ந்து விட்டன. யுத்த வன்முறையும் நின்று விட்டது.

ஆனால், அவை ஏற்படுத்தி விட்டுப் போன வடுக்களும், விளைவுகளும், பாதிப்புக்களும் பத்து ஆண்டுகள் கடந்தும் தன் கைவரிசையைத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. போரின் விளைவுகளான பல்வேறு துன்பியல் செயற்பாடுகள் தொடர்கின்றன. யுத்தத்தின் பெயரால் ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் நிலங்கள், சொத்துக்கள் விடுவிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடுகள், நிவாரணங்கள் எவையும் வழங்கப்படவில்லை. பயங்கரவாதச் தடைச் சட்டம் என்ற கொரூர, அநாகரிகமான – மனிதாபிமான வாழ்வியலுக்கு ஒவ்வாத – கீழ்த்தரமான சட்டத்தின் ஆட்சி தொடர்கின்றது. இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கெதிரான செயற்பாடுகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதி, முறையான விசாரணைகள் நடத்தப்பட்டு, குற்றம் இழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படும் – பொறுப்புக் கூறல் – முறைமை முன்னெடுக்கப்படவேயில்லை. மீண்டும் இத்தகைய வன்முறை யுத்தம் நடைபெறாது என்ற உறுதியளிக்கத்தக்கதான மீள நிகழாமை நடவடிக்கை முன்னெடுக்கப்படவேயில்லை.

இத்தகைய பாதிப்புத் தொடர்பில் மிக முக்கியமானது காணாமற்போனோர் விவகாரம்.

யுத்தத்தின் பெயரால் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் தமக்கு நீதி, நியாயம் கோரி காணாமலாக்கப்பட்டோர் வீதிக்கு வந்து இறங்கி நடத்தும் போராட்டம் ஆயிரம் நாள்கள் கடந்தும் பயனின்றி அவமாகத் தொடர்கின்றது.

காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில், முக்கிய விடயமாகக் காணாமல்போனோர் அலுவலகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

யுத்தம் முடிந்த பின்னர் அவ்விடயத்தில் இலங்கை அரசுத் தரப்பு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், செயற்பாடுகள் தொடர்பில் சர்வதேச அழுத்தம் உச்சத்தைத் தொட்டபோது, அந்த அழுத்தத்தை – நெருக்குவாரத்தை – சமாளிப்பதற்காக முன்னைய மைத்திரிபால – ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசு எடுத்த கண்துடைப்பு நடவடிக்கைதான் இந்தக் காணாமல் போனோர் பற்றிய அலுவலகமாகும்.

'மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதை' மாதிரி நீண்ட கால எடுப்புக்கள், ஆரவாரங்கள், ஆலாபரணங்களுடன் அந்த அலுவலகம் திறக்கப்பட்டது. அலுவலகங்களைத் திறந்து, ஆள்களைப் பணிக்கு அமர்த்தி, கோவைகளை நிரப்பியமையைத் தவிர, அந்த அலுவலகத்தினால் பெரிதாக எதையும் சாதிக்க முடியவில்லை. தமக்கு நீதியையும் நியாயத்தையும் வழங்கக் கோரி ஆயிரம் நாள்களுக்கு மேல் தொடர்ந்து போராட்டம் நடத்தி வரும் காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் திருப்திப்படுத்தக் கூடிய வகையில் உருப்படியான எதுவுமே அந்த அலுவலகத்தால் செய்ய முடியவில்லை – சாதிக்க முடியவில்லை – என்பதே யதார்த்த நிலைமையாகும்.

இதற்கிடையில், யுத்தப் பாதிப்பு விவகாரங்களில் நீதி, நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற சர்வதேச அழுத்தத்தைப் பொருட்படுத்தாத அல்லது அதனைப் புறக்கணித்து விட்டேத்தியாக நடக்கும் ராஜபக்ஷக்களின் அரசு மீள ஆட்சி அதிகாரத்துக்கு வந்துவிட்ட நிலையில், காணாமலாக்கப்பட்டோரின் அலுவலகம் கேள்விக்குரியதாக – கேள்விக்குறியானதாக – செய்திகள் வெளியாகின.

இந்த அலுவலகமே பயனற்றது, எதிர்பார்க்கும் நீதியை பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெற்றுத் தரும் தகைமையோ, நியாயாதிக்கமோ, வலுவோ, தனித்துவமோ கொண்டதல்ல என்று பாதிக்கப்பட்ட தரப்புக்கள் புறமொதிக்கி நிற்கையில் –

புதிதாக அதிகாரத்துக்கு வந்த ராஜபக்ஷக்களின் அரசும் அந்த அலுவலகத்தை அடித்து மூடி, அதற்கு நிரந்தர முற்றுப் புள்ளி வைக்கலாம் என்று தீர்மானிக்கும் நிலையில் இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ள சூழலில் –

இந்த இரண்டும் கெட்டான் நிலைக்கு மத்திய மேற்படி அலுவலகம் தன் நிலைமை குறித்து ஆதங்கத்தோடு நீண்ட அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கின்றது.

"காணாமலாக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம் தொடர்பான நாடாளுமன்றச் சட்டத்தை அரசு மீள்பரிசீலிக்கத் தீர்மானித்துள்ளது என செய்திகள் வெளிவந்துள்ளன. சட்டங்களைக் கொண்டு வருவது அரசின் தனி உரிமை என்றாலும், இவ்விடயத்தில் காணாமலாக்கப்பட்டோர் விடயத்தைக் கையாளும் எமது அலுவலகம் உட்பட சம்பந்தப்பட்ட தரப்புக்களின் பரந்த ஆலோசனையுடனேயே அது முன்னெடுக்கப்பட வேண்டும்." என்று அந்த அறிக்கை வலியுறுத்துகின்றது.

இந்த அலுவலகத்தையே இல்லாதொழிக்க புதிய அரசு முயலுகையில், அது குறித்துத் தங்களுடன் பேச வேண்டும் என அந்த அலுவலகம் கோருவது "கோழியைக் கேட்டுத்தான் ஆணம் காய்ச்ச வேண்டும்" என்ற கதை மாதிரித்தான் உள்ளது.

# ஐ.தே.க. மன்னிப்புக் கோரவேண்டும்

## சொல்கிறார் திலங்க சுமதிபால

கொழும்பு, ஜன. 16

அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவே அரசு மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கோருவதாகதத் தெரிவித்துள்ள தொழில்நுட்ப, புத்தாக்க இராஜாங்க அமைச்சர் திலங்க சுமதிபால, நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சனுக்காக ஐக்கியத் தேசியக் கட்சி பொது மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டுமெனவும் தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் ரைக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நீதித்துறையின் நம்பகத் தன்மை இல்லாது ஒழிக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த அரசில் அரசமைப்புச் சபையிலிருந்தவர்கள் நீதித்துறை மீது தலையீடு செய்தனர்.

19ஆவதுத் திருத்தச் சட்டம் மீது மக்கள் நம்பிக்கை இழந்திருக்கின்றனர். இதனை மாற்றியமைக்க அரசமைப்பு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

அரசமைப்பு மாற்றத்தைச் செய்வதற்கு ஜனாதிபதி கோட்டாபயவின் தலைமையிலான அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியம். இதற்காகவே நாடாளுமன்றப் பெரும்பான்மையை அரசு கோருகிறது.

ரஞ்சன் ராமாநாயக்க இருக்கும் நாடாளுமன்றில் நானும் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பது கவலையளிக்கிறது.

ரஞ்சன் போன்ற ஒருவருக்கு நாடாளுமன்ற வாய்ப்பை வழங்கியமைக்காக, ஐக்கியத் தேசியக் கட்சி மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டும் – என்றார். (ஐ)

# மரக்கறி உற்பத்தியில் வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 16

மலையகத்தில் தொடர்ந்து மூன்று மாதங்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக, மரக்கறி உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மரக்கறி உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாக, நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் விலை உயர்வடைந்துள்ளது.

இந்நிலையில், இங்கிருந்து கொழும்பு, தம்புளை ஆகிய பிரதேசங்களிலுள்ள பொருளாதார மத்திய நிலையங்களுக்குக் கொண்டுச் செல்லப்படும் மரக்கறிகறிகளின் விலைகளை, மரக்கறிகளை மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களே தீர்மானித்து வருகின்றனர்.

சமீபத்தில் பெய்த கடும் மழை காரணமாகவே, மரக்கறிச் செய்கையில் வீழ்ச்சி ஏற்பட்டது. தொடர்ந்து பெய்த மழை காரணமாக, விவசாய மண், களிமண்தன்மையில் காணப்படுகின்றதோடு, இதனால், மரக்கறிகளின் வளர்ச்சி குறைவடைந்துள்ளது.

அத்துடன், விவசாய நிலங்களுக்குப் போடப்பட்ட சேதன, அசேதன உரங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதுடன், ஏற்கெனவே போடப்பட்ட சில மரக்கறிகள் மழை காரணமாக அழுகியுள்ளன.

இதனால், ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# ரயில்வே சேவைக்கு 800 கோடி ரூபா நட்டம்

2019ஆம் ஆண்டு இலங்கை ரயில் சேவைக்கு 800 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் ரயில் திணைக்கள ஊழியர்களுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

கடந்த அரசின் ஆட்சியில் இடம்பெற்ற பணிப்புறக்கணிப்பு காரணமாக அரச போக்குவரத்துத் துறை தொடர்பில் மக்களின் நம்பிக்கை சிதைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, ரயில் சேவையின் வளர்ச்சிக்கு ஊழியர்களின் யோசனைகள் மற்றும் பரிந்துரைகளைப் பெறுவதற்காக இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பழைய ரயில்களை புதுப்பிக்கும் பணிகளை ஊழியர்களுக்கே வழங்குதல், பயனற்ற சில அதிகாரிகளை நீக்குதல் மற்றும் புதிய அதிகாரிகளை நியமித்தல், சுற்றுலாப் பயணிகளுக்காக புதிய சொகுசு ரயில் சேவையைத் தொடங்குவது போன்ற யோசனைகள் இதன்போது முன்வைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# நீர்கொழும்பு பொது வைத்தியசாலையை மத்திய அரசு சுவீகரிப்பதற்கு அங்கீகாரம்

கொழும்பு, ஜன. 16

நீர்கொழும்பு பொது மருத்துவமனையை மத்திய அரசு கையகப்படுத்த அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி அமைச்சரவை பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அருகாமையில் இருப்பதால் இந்த மருத்துவமனை மத்திய அரசால் கையகப்படுத்தப்படவுள்ளது.

நீர்கொழும்பு பொது மருத்துவமனை தற்போது மாகாண சபை மருத்துவமனையாகச் செயல்படுகிறது குறிப்பிடத்தக்கது.

# மின்வெட்டை எதிர்கொள்ள நேரிடலாமென எச்சரிக்கை!

கொழும்பு, ஜன. 16

போதியளவான மழை வீழ்ச்சி கிடைக்காவிடின் மின்வெட்டை எதிர்கொள்ள நேரிடலாமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மின்சாரப் பொறியியலாளர் சங்கத்தினால் அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் வரை போதியளவான மழை வீழ்ச்சி கிடைக்காவிடின் இந்த நிலை ஏற்படும் என மின்சார பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இப்பிரச்சினைக்கு முகங்கொடுக்க முன்னர், அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

இதற்கான மாற்று வழியாக தனியார் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து போட்டி விலைக்கு மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய முடிமெனவும் சங்கத்தின் தலைவர் அநுருத்த திலகரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதற்கான நீண்டகாலத் தீர்வாக மிகப் பெரியளவிலான மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் கூறினார். (ஐ)

**நாளை 17.01.2020 - வெள்ளிக்கிழமை**

நட்சத்திரம்: சித்திரை பி.இ 4.57 வரை
திதி : ஸ்பதமி சித்தம் மு.ப 11.29 வரை

இராகுகாலம் : 11.05 – 12.35
சுப நேரம் : 6.35 – 8.05

# தன்னைத் தானே சுட்டு பொலிஸ் அதிகாரி சாவு

கொழும்பு, ஜன. 16

மிரிஹான பொலிஸில் தன்னைத்தானே சுட்ட பொலிஸ் அதிகாரி உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை இந்தச் சம்பவம் நடந்தது.

பொலிஸ் சுற்றுச்சூழல் பிரிவின் பொறுப்பதிகாரியாக அந்த அதிகாரி பணியாற்றி வருகிறார் என்றும், அவரது உத்தியோகபூர்வ துப்பாக்கியைப் பயன்படுத்தி, தன்னைத்தானே சுட்டார் எனவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

தன்னைத்தானே சுட்டமையையடுத்து, மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி அங்கு அவர் உயிரிழந்துள்ளார்.

தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இந்தச் சம்பவம் நடந்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது.

# ரணிலுடன் அரசியல் சமருக்கு சஜித் தயார்!



கொழும்பு, ஜன. 16

ஐக்கியதேசியக்கட்சிக்குள் மோதல் உக்கிரமடைந்துள்ள நிலையில், அக்கட்சியின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற மிகமுக்கிய கூட்டமொன்று இன்று சிறிகொத்தாவில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு செயற்குழு மற்றும் நாடாளுமன்ற குழு உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைப்பதவியையும் சஜித்துக்கு வழங்குமாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வரும் நிலையில் அதற்கு பச்சைக் கொடி காட்ட ரணில் மறுத்துவருகிறார். இதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மோதல் வலுத்துள்ளது.

தலைமைப்பதவியில் ரணில் நீடிப்பார் என்ற நிலை உருவானதால் புதியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்கும் முயற்சி யில் சஜித் தரப்பு இறங்கி யுள்ளது.

இதனால் விழிப்படைந்த ரணில் தரப்பு, கட்சி பிளவுபடு வதை தவிர்ப்பதற்காக ஐ.தே.கவின் தலைமைப்பதவிக்கு கருஜயசூரியவுக்கு வழங்கும்வகையிலான காய் நகர்த்தலில் ஈடுபட்டுவருகின்றது.

எனினும், தலைமைத்துவச் சபையொன்றை அமைப்பதே ரணிலின் வியூகமாக உள்ளது.

ஆனால், தலைமைப்பதவி சஜித்துக்கே வழங்கப்பட வேண்டும் என அவர் ஆதரவு எம்.பிக்கள் வலியுறுத்திவருகின்றனர்.

இன்று நடைபெறும் கூட்டத்தில் உறுதியான – இறுதியான முடிவு அறிவிக்கப்படாவிட்டால் சஜித் தரப்பு மாற்று நடவடிக்கையில் இறங்கக்கூடும் என்றும் அதற்கான ஆரம்பக் கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் என என்றும் தெரியவருகின்றது.

இதன்படி புதிய கூட்டணியின் மாவட்ட அமைப்பாளர்களாக ஹரின் பெர்னாண்டோ, அஜித் பி. பெரேரா, நளின் பண்டார, சுஜீன சேனசிங்க ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். திஸ்ஸ அத்தநாயக்க, சஜின் வாஸ் குணவர்தன ஆகியோருக்கும் முக்கிய பதவிகள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜன.16

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் –**

உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, கம்பர்மலை பாரதிதாசன், பழைய பொலிஸ் நிலையம், வல்வெட்டித்துறை ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில்-**

சூடுவெந்தபுலவு, அவுசதப்பிட்டிய கிராமம், சாளம்பைக்குளம் ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில்-**

மூன்றாம்பிட்டியிலிருந்து பள்ளமடு வரை, பள்ளமடு shrimp Farm ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# 22 மருந்துப் பொருள்களின் விலை குறைப்பதற்கு முடிவு

கொழும்பு, ஜன. 16

22 வகையான மருந்துப்பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விலை குறைப்பிற்கு எதிர்வரும் நாள்களில் சுகாதார அமைச்சரின் அனுமதி கிடைக்கப்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதுவரை 70 வகையான மருந்து வகைகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன எனவும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

# அரச வரிச் சலுகையை மக்களுக்கு வழங்காத நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஜன. 16

அரசு வழங்கிய வரிச்சலுகையைப் பொதுமக்களுக்கு வழங்காத நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் எம்.எஸ்.எம் பௌஸர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசு வழங்கிய வரிச் சலுகையை மக்களுக்கு வழங்காத சகல நிறுவனங்களுக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைப்பதற்காக அரசு பல இன்னல்களுக்கு மத்தியில் நிவாரணங்களை வழங்கியது.

எனினும், அந்தச் சலுகைகளை வழங்காத நிறுவனங்களுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் அவர் கூறினார்.

# உயிரிழந்த 3 மாணவிகளின் சடலங்கள் இலங்கை வந்தன

கொழும்பு, ஜன. 16

அஸர்பைஜானில் உயிரிழந்த மூன்று இலங்கை மாணவிகளின் சடலங்களும் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

அஸர்பைஜானில் பாகு தலைநகரில் உள்ள காஸ்பியன் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற இலங்கை மாணவிகள் மூவர், கடந்த 9ஆம் திகதி நச்சுக்காற்றை சுவாசித்ததில் உயிரிழந்திருந்தனர்.

அவர்கள் தங்கியிருந்த விடுதியின் கீழ்த்தளத்தில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து பரவிய நச்சுக்காற்றை சுவாசித்திருந்தனர். இதனால் பாதிக்கப்பட்ட மூன்று மாணவிகளும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். எனினும், அவர்கள் உயிரிழந்திருந்தனர்.

கடுவெலவைச் சேர்ந்த மல்சா சந்தீபானி (வயது – 23), தாருகி அமயா (வயது – 21), அமோடியா மதுஹன்சி (வயது 24) ஆகியோரே உயிரிழந்தனர். சந்தீபனி, அமயா சகோதரிகள்.

உயிரிழந்த சடலங்கள் நேற்று இலங்கைக்கு கொண்டு வரப்பட்டன. (ஐ)

# கிளிநொச்சியில் சிறப்பாக நடந்தது தைப் பொங்கல்









கிளிநொச்சி, ஜன. 16

கிளிநொச்சியில் மாவட்டத்தில் தைப்பொங்கல் நிகழ்வுகள் பல இடங்களிலும் சிறப்பாக இடம்பெற்றுள்ளன.

ஆலயங்கள், வீடுகள், வியாபார நிலையங்கள், நிறுவனங்கள் என சகல இடங்களிலும் சிறப்பாக தைப்பொங்கல் இடம்பெற்றுள்ளது.

உழவர் திருநாளான தைப் பொங்கல் நிகழ்வு கிளிநொச்சி அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் அருட்தந்தை லூக் ஜோன் தலைமையில் இடம்பெற்றது.

தமிழ் கிறிஸ்தவர்கள் என்ற அடிப்படையில் தமிழர்களுடைய பாரம்பரிய நிகழ்வான பொங்கல் நிகழ்வைத் தாமும் கொண்டாடினர் என அருட்தந்தை தெரிவித்தார்.

இதனைத் தவிர அரசியல் கட்சி அலுவலகங்கள், வியாபார நிலையங்கள் போன்றவற்றிலும் சிறப்பாக பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயனடையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# தைப்பொங்கலை ஒட்டி தமிழகத்தில் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் ஆரம்பம்!






## அவனியாபுரத்தில் மட்டும் காலையிலேயே 16 பேர் வரை காயம்






மதுரை,ஜன.16

தைப்பொங்கல் தினமான நேற்று தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டுப் போட்டி ஆர்பமாகியுள்ளது.

அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டியில் நேற்றுக் காலை பத்து மணி வரை நான்கு மாடுபிடி வீரர்கள் மாட்டின் உரிமையாளர் ஒருவர் உட்பட 16 பேர் காயமடைந்துள்ளனர்.

அவனியாபுரத்தில் நேற்றுக்காலை 8 மணிக்கு ஜல்லிக்கட்டு தொடங்கியது. அவனியாபுரம் – திருமங்கலம் சாலையில் இதற்காக வாடிவாசல் அமைக்கப்பட்டிருந்தது. பார்வையாளர்கள் உள்ளே வராமலிருக்க பேரிகார்டுகள் அமைக்கப்பட்டிருந்தன. போட்டியில் பங்கேற்க 700 காளைகள் பதிவு செய்யப்பட்டு, டோக்கன்கள் வழங்கப்பட்டன.

மதுரை, திண்டுக்கல், தேனி, கம்பம், திருச்சி, ராமநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த காளைகள் மருத்துவ பரிசோதனைக்கு பிறகே வாடிவாசல் வழியாக அனுமதிக்கப்பட்டன.உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவுப்படி அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதிபதி மாணிக்கம் தலைமையிலான குழு, நேற்றுக் காலை 8 மணிக்கு போட்டியை தொடங்கி வைத்தது.

காளைகளை அடக்க மாடுபிடி வீரர்கள் ஆர்வம் காட்டினர். ஜல்லிக்கட்டு மாடுகளை அனுப்பும் டோக்கன் குளறுபடியால் மாடு உரிமையாளர்களை கட்டுப்படுத்த பொலிஸார் லேசான தடியடி நடத்தினர்.

காளைகலை அடக்கும் வீரர்களுக்கு அண்டா, குக்கர் என விதவிதமான பரிசுகள் வழங்கப்பட்டன.

அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டியில் பத்து மணி வரை வரை நான்கு மாடுபிடி வீரர்கள், மாட்டின் உரிமையாளர் ஒருவர் உட்பட 16பேர் காயமடைந்தனர். இருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இருவர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மாட்டை பிடிக்க முயன்ற மாட்டின் உரிமையாளர் விக்னேஷ் என்பவர் மீது மற்றொரு மாடு முட்டியதில் காயமடைந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

# இணைய, தொலைபேசிச் சேவைகள் ஜம்மு காஷ்மீரில் மீண்டும் தொடங்கின

### சமூக வலைத்தளங்கள் மீதான தடை தொடர்கிறது




'புராட் பாண்ட்' இணையதள சேவை, 'போஸ்ட் பெய்ட்' வாடிக்கை யாளர்களுக்கான 2 ஜி செல்போன் சேவை ஆகியவற்றை மீண்டும் வழங் கியுள்ளதாக ஜம்மு காஷ்மீர் நிர்வா கம் தெரிவித்துள்ளது.

கடந்தஓகஸ்ட் மாதம் 5 ஆம் தேதி ஜம்மு காஷ்மீர் மாநிலம் இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டு, மாநிலத்திற்கு அளிக்கப்பட்டிருந்த சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்படுவதாக மத்திய அரசு அறி வித்தது. அதே தினம் அங்கு இணை யதள சேவைகள் மற்றும் தொலை பேசி இணைப்புகள் முடக்கப்பட்டன.

இதை எதிர்த்து தாக்கலான மனுக் களை விசாரித்த உச்ச நீதிமன்றம் இணையதள சேவை அடிப்படை உரிமை என்பதால் அதை புனரமைப் பது குறித்து ஒரு வாரத்திற்குள் நட வடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டது.

அதன் அடிப்படையில், ஜம்மு வில் ஹோட்டல்கள், பயண ஏற்பாட்டா ளர்கள் மற்றும் மருத்துவமனைக ளுக்கான இணையதள சேவைகள் மீண்டும் வழங்கப்பட்டுள்ளன. அதே சமயம் சமூக வலைதளங்கள் மீதான தடை தொடர்கிறது.

# இந்திய இராணுவ வீரர்கள் நால்வர் காஷ்மீர் பனிச்சரிவில் சிக்கிச் சாவு!



ஜம்மு – காஷ்மீரில் பல இடங்களில் பனிச்சரிவு ஏற்பட்ட நிலையில், பனிச்சரிவில் சிக்கி இந்திய இராணுவ வீரர்கள் நால்வர் உயிரிழந்தனர்.

மேலும் இருவரைக் காணவில்லை எனத் தகவல் வெளியாகியுள்ளது. அங்கு கடும் பனிப்பொழிவு நிலவி வரும் சூழலில் பந்திப்போரா மாவட்டத்தின் குரேஸ், ராம்புரா மற்றும் குப்வாரா மாவட்டத்தின் மச்சில் ஆகிய பகுதிகளில் பனிச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

மச்சில் பகுதியில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கிக் கொண்ட இராணுவ வீரர்கள் சிலர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில், 4 வீரர்கள் உயிரிழந்தனர்.

காணாமல் போன மேலும் இரு வீரர்களை தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதனிடையே இமாச்சல பிரதேசத்தில் ஏற்பட்ட பனிச்சரிவை சுற்றுலாப் பயணிகள் சிலர் மிக அருகில் சென்று படம்பிடிக்கும் வீடியோ வெளியாகியுள்ளது.

# முதல்வரை மேடையில் வைத்துக் கொண்டு அவரை மிரட்டும் தொனியில் பேசிய சுவாமி

## கர்நாடகத்தில் எடியூரப்பாவுக்குக் கிட்டிய அனுபவம்

பெங்களூரு,ஜன.16

கர்நாடகா முதலமைச்சர் எடியூரப்பாவை பொது மேடையில் மடாதிபதி மிரட்டும் வகையில் பேசியமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடக மாநிலம் தாவணகெரே நகரில் பஞ்சமாாலி சமுதாயத்தினரின் மாநாடு நடைபெற்றது. இதில் கர்நாடக முதலமைச்சர் எடியூரப்பா, உள்துறை அமைச்சர் பசவராஜ் பொம்மை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அப்போது பேசிய பஞ்சமாாலி மடத்தின் மடாதிபதி வச்சதானந்தா குருஜி, தங்கள் சமுதாயத்தை சேர்ந்த எம்.எல்.ஏ. முருகேஷ் நிரானிக்கு அமைச்சர் பதவி வழங்கா விட்டால், ஒட்டுமொத்த பஞ்சமாாலி சமுதாயமும் உங்களைப் புறக்கணித்து விடும் என முதலமைச்சர் எடியூரப்பாவை பார்த்து மிரட்டல் விடுக்கும் வகையில் பேசினார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த முதலமைச்சர் எடியூரப்பா, இருக்கையை விட்டு எழுந்து இது போன்று பேச வேண்டாம் எனக் கோபத்துடன் மடாதிபதியிடம் கூறினார். ஆனாலும் மடாதிபதி, முதலமைச்சர் எடியூரப்பாவை பார்த்து அமைதியாக இருக்கையில் அமரும்படி மிரட்டும் வகையில் பேசியமையால் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் அமைதியான முதலமைச்சர் எடியூரப்பா, மடாதிபதி கூறியதை எல்லாம் செய்ய முடியாது என்றும், விண்ணப்பம் வைக்கலாம், தம்மை மிரட்ட முடியாது என்றும் கூறினார். முதலமைச்சர் இருக்கையில் தம்மை அமர வைக்க 17 பேர் தங்களது எம்.எல்.ஏ. பதவிகளை ராஜினாமா செய்தார்கள் என்று கூறிய எடியூரப்பா, அவர்களுக்கு துரோகம் இழைக்க முடியாது என்றும் கூறினார்.

# கடந்த ஆண்டு சவுதியில் 184 பேருக்குத் தூக்கு; ஒரே நாளில் 3 சிறுவர் உட்பட 37 பேர் கழுவில்!

ரியாத்,ஜன.16

சவுதிஅரேபியாவில்கடந்தஆண்டு மட்டும் 184 பேர் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டனர் என்றுமனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.



உலகில் மிகக் கடுமையான சட்ட திட்டங்கள் கொண்ட நாடு சவுதி அரேபியா. அங்கு பயங்கரவாதத்தில் ஈடுபடுவது, அரசுக்கு எதிராகச் செயல்படுவது போன்றவை கடும் குற்றச் செயல்களாகக் கருதப்படுகின்றன. இதில் ஈடுபடும் நபர்களுக்கு அதிகபட்சமாக மரண தண்டனை விதிக்கப்படுகிறது.

இந்த நிலையில் அங்கு கடந்த 2019 ஆம் ஆண்டில் மட்டும் 184 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற அதிர்ச்சி தகவலை சர்வதேச மனித உரிமை அமைப்பான 'ரிப்ரீவ்' தெரிவித்துள் ளது.

அந்த அமைப்பு அளித்துள்ள புள்ளி விவரப்பட்டியலில், மரண தண்டனை நிறைவேற்றப்பட்டவர்களில் 88 பேர் உள்நாட்டினர் என்றும், 90 பேர் வெளி நாட்டினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 6 பேர் எந்த நாட்டினர் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் 'ரிப்ரீவ்' தெரிவித் துள்ளது.

இதில்அதிகபட்சமாககடந்தஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி மட்டும் 37 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதில் 3 பேர் சிறுவர்கள் என்றும் கூறியுள்ளது. இந்த எண்ணிக்கை கடந்த 4 ஆண்டுகளில் அதிகம் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.



# காட்டுத் தீயில் சிக்கித் தத்தளிக்கும் ஆஸியைக் காப்பாற்றுகிறது மழை!

காட்டுத் தீயில் சிக்கி தத்தளித்து வரும் ஆஸ்திரேலியாவின் சில பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதால் மக்கள் சற்று நிம்மதியடைந்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் பற்றி எரிந்துவரும் காட்டுத் தீயால் ஒரு லட்சம் சதுர கிலோ மீற்றர் அளவுக்கான பகுதிகள் எரிந்து நாசமாகியுள்ளன. தீயில் சிக்கி 27 பேர் உயிரிழந்துள்ள நிலையில், சுமார் 2000 வீடுகள் மற்றும் ஏராளமான விலங்குகள் தீக்கிரையாகியுள்ளன.

கடந்த சில நாள்களாக இங்கு குளுமையான சூழல் நிலவுவதால் தீ பரவுதல் சற்று குறைந்துள்ளதாகக் கூறப்பட்டாலும், நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான மெல்போர்ன், புகை நகரமாகக் காட்சியளித்து வருகிறது. இந்நிலையில் நியூ சவுத் வேல்ஸ் மற்றும் விக்டோரியா மாநிலங்களின் சில பகுதிகளில் மழைபெய்ய வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பலத்த மழை பொழியும் பட்சத்தில், இப்பகுதியில் காட்டுத் தீ அணைபடும் எனக் கூறப்படுகிறது.

# அமெ.மீனவரிடம் சிக்கிய மிக வயதான மீன்..!




அமெரிக்காவில் மிக வயதான வார்சா இன மீன் ஒன்று மீனவரிடம் சிக்கியுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் புளோரிடாவின் மேற்கு கடலில் மீன்பிடித்துக்கொண்டிருக்கும் போது ஜேசன் பாயல் என்ற மீனவரின் தூண்டிலில் அரிய வகை மீன் சிக்கியது.

160 கிலோ எடை கொண்ட அந்த மீனுடன் மீனவர் பாயல் எடுத்துக் கொண்ட புகைப்படத்தை புளோரிடா மீன் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு ஆணையம் தனது முகப்புத்தகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.

மேலும் தங்களின் நீண்ட கால ஆராய்ச்சித் திட்டத்திற்காக சேகரிக்கப்பட்ட மிக வயதான மீன் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மீனின் வயது 50 என ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்

# உக்ரைன் விமானத்தை சுட்டு வீழ்த்தியமையில் தொடர்புடையோரைக் கைது செய்தது ஈரான்!

## அரசுச் செய்தித் தொடர்பாளர் அறிவிப்பு



தெஹ்ரான்,ஜன.16

உக்ரைன் விமானத்தை சுட்டு வீழ்த்தியதில் தொடர்புடைய பலர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.குற்றவாளிகள்அனைவரையும் தண்டிப்போம்என ஈரான் அதிபர் ஹசன் ரூஹானி அறிவித்தார்.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் இருந்து, உக்ரைன் தலைநகர் கீவ் நோக்கிக் கடந்த 8 ஆம் திகதி புறப்பட்டு சென்ற உக்ரைன் இன்டர்நேனல் ஏர்லைன்ஸ் விமானம் சில நிமிடங்களிலேயே விழுந்து நொறுங்கியது.

இதில் அந்த விமானத்தில் பயணம் செய்த 176 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலோர் ஈரான் மற்றும் கனடா நாட்டினர் ஆவர்.

ஆனால் விமானம் விழுந்தது விபத்துதானா அல்லது சுட்டு வீழ்த்தப்பட்டதா என்ற கேள்வி எழுந்தது.

இந்தக் கோர சம்பவம் நடந்த பின் 3 நாள்களாக, உக்ரைன் விமானம் படைகளால் அது சுட்டு வீழ்த்தப்படவில்லை, தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே விழுந்து நொறுங்கியது என்று ஈரான் கூறி வந்தது.

ஆனால் 3 நாள்களுக்குப் பின்னர், திடீர் திருப்பம் ஏற்பட்டது. உக்ரைன் விமானத்தை நாங்கள்தான் தவறுதலாக சுட்டு வீழ்த்தி விட்டோம் என ஈரான் இராணுவம் அறிவித்தது. இது பெருத்த சர்ச்சையை ஏற்படுத்தியது.

பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் ஈரானியர்கள் என்பதால், உள்நாட்டு மக்கள் கொந்தளித்தார்கள். அதிபர் ஹசன் ரூஹானி அரசுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தினர்.

இந்த சம்பவம் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்ற கருத்து எழுந்துள்ளது. இந்த நிலையில் உக்ரைன் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட விவகாரத்தில் தொடர்புடைய பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதை ஈரான் அரசின் நீதித் துறைச் செய்தித் தொடர்பாளர் குலாம் உசேன் இஸ்மாயிலி நேற்று தெரிவித்தார். ஆனால் எத்தனை பேர் கைது செய்யப்பட்டுள்ளனர், அவர்கள் யார்,யார் என்பது குறித்து அவர் கூடுதல் தகவல்களை வெளியிடவில்லை.

எனினும் 30 படையினர் வரை கைது செய்யப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்படுவதாக தெஹ்ரானில் இருந்து வரும் தகவல்கள் கூறுகின்றனது. இது ஈரானில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த பரபரப்புக்கு மத்தியில் ஈரான் அதிபர் ஹசன் ரூஹானி டெலிவினில் நாட்டு மக்களுக்கு உரை ஆற்றினார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

இந்தச் சம்பவத்தில் எந்தவொரு மட்டத்திலும், தவறுதலாக அல்லது அலட்சியமாக நடந்து கொண்ட எவரும் நீதியை எதிர்கொள்வது நமது மக்களுக்கு முக்கியமானது.

உயர் நீதிபதிகளையும், வல்லுநர்களையும் கொண்ட சிறப்பு நீதிமன்றத்தை நீதித்துறை அமைக்க வேண்டும். இதை ஒட்டுமொத்த உலகமும் கவனித்துக் கொண்டிருக்கிறது.

உக்ரைன் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு காரணமான ஒவ்வொருவரும் தண்டிக்கப்பட வேண்டும். - இவ்வாறு அவர் கூறினார்.

## சீனாவில் நேர்ந்த பயங்கரம்

# திடீரென ஏற்பட்ட பாரிய புதைகுழியினுள் பஸ் விழுந்ததில் 6 பேர் பலி: 16 பேர் காயம்





பீஜிங்,ஜன.16

சீனாவில் வீதியில் திடீரென ஏற்பட்ட பாரிய புதைகுழியினுள் பயணிகளின் பெரிய பஸ் ஒன்று முழுதாக விழுந்து விபத்தில் சிக்கியதில் 6 பேர் பலியாகினர்.

சீனாவில் கிங்காய் மாகாணத்தின் தலைநகரான ஜினிங்கில் செஞ்சிலுவைச் சங்க ஆஸ்பத்திரிக்கு வெளியே உள்ள பஸ் நிறுத்தம் அருகே திங்கட்கிழமை உள்ளூர் நேரப்படி மாலை 5.30 மணிக்கு ஒரு பஸ் வந்து கொண்டிருந்தபோது சாலையில் திடீரென ஒரு புதைகுழி உருவானது. அதில் அந்த பஸ் விழுந்தது. பஸ்ஸில் இருந்த பயணிகள் அலறினர்.


பஸ் மட்டுமின்றி, அந்தப் பகுதியில் நின்றிருந்த பொதுமக்களில் சிலரும்கூட அந்த புதைகுழிக்குள் விழுந்தனர். பஸ் விழுந்ததைத் தொடர்ந்து அந்த புதைகுழிக்குள் ஒரு வெடிப்பும் நிகழ்ந்தது. இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்ததும் மீட்பு படையினர் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

எனினும் இந்த விபத்தில் 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 16 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். இது தொடர்பாக விசாரணை நடத்தப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு இதே போன்று சாலையில் ஏற்பட்ட ஒரு புதைகுழியில் 3 பேர் விழுந்து பலியானமையும், அதற்கு முன்பாக 2013 அம் ஆண்டு, 10 மீட்டர் அகலத்தில் உருவான புதைகுழியில் விழுந்து 5 பேர் பலியானமையும் குறிப்பிடத்தக்கவை.

# இலங்கையில் ஏககாலத்தில் அமெரிக்க, ரஷ்ய, சீன முகங்கள்!

## இது கிரகணமா? பிரகாசமா?



அறிவியல் ரீதியில் சூரியன், பூமி மற்றும் சந்திரன் ஆகிய மூன்றும் ஏதோ ஒரு வகையில் நேர்கோட்டில் வருவதால் கிரகணங்கள் வருகின்றன.

சூரியனுக்கும் பூமிக்கும் இடையே சந்திரன் வந்தால் அது சூரிய கிரகணம். இதுபோல சந்திரனுக்கும், சூரியனுக்கும் நடுவே பூமி வந்தால் அது சந்திர கிரகணம்.

ஆகையால் இடங்கள் மாறினாலும் சூரியன், பூமி மற்றும் சந்திரன் ஆகியன ஒரு நேர்கோட்டில் வரும் அறிவியல்படி கிரகணங்கள் வருவது உண்மையானால், இலங்கைத்தீவில் இன்று ஒரே நேர்கோட்டில் அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளின் ராஜதந்திர முகங்கள் ஏக காலத்தில் தென்பட்டமை அந்தத் தீவுக்கு அரசியல் கிரகணமாக மாறக்கூடுமா? இல்லை அதீத பிரகாச நிலையாக உருவாகக்கூடுமா என்ற வினாக்களை எழுப்ப வைக்கிறது.

அந்த வகையில் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய



விவகாரங்களுக்குரிய உதவிச்செயலாளர் அலிஸ் வெல்ஸ் மூவர் அடங்கிய தனது தூதுகுழுவுடன் செவ்வாய் அதிகாலை கொழும்பில் கால்பதித்தார்.

ஆனால் அவர் அவ்வாறு கால்பதிக்க முன்னரே 16 பேர் அடங்கிய தூதுகுழுவுடன் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ இலங்கையில் முகாமிட்டுவிட்டார்.

அவ்வாறாயின் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி லவ்ரொவ் என்ன சளைத்தவரா? அவரும் 42 பேர் அடங்கிய ஜம்போ குழுவுடன் அன்று காலை இலங்கையில் ஜம்மெனக் குதித்தார்.

அடேங்கப்பா இன்னும் சற்றேறக்குறைய 20 நாள்களில் இன்னொரு சுதந்திர தினத்தை காணவுள்ள இலங்கைத் தீவுக்கு எப்பேர்ப்பட்ட பாக்கியம் இது! உலகின் மூன்று முன்னணி வல்லரசுகளின் முக்கிய தலைகள் ஒரேநேரத்தில் அந்தத்தீவில்.

இதற்கும் அப்பால் இலங்கையுடனான உறவை மேலும் வலுப்படுத்தது என்ற தூண்டிலுடன் ஜப்பானிய அமைச்சர் ரேமினேற்றர் கோட்டாபய ராஜபக்ஷவுடன் செவ்வாயன்று சந்தித்துப்பேசியமை வேறுவிடயம்.

ஆகையால் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சில் இருக்கக்கூடிய ராஜதந்திர பரிசாரகர்களுக்கு இரண்டு நாள்களுக்கு வியர்த்து விறுவிறுவிறுக்கும் வகையில் வேலை இருப்பது நிச்சயம்.

ஏனெனில் எதிலும் 'பெர்பெக்ற்' பார்க்கக்கூடிய ஒரு 'ரேமினேற்றர்' ஆட்சித் தலைவராக இருப்பதால் ஒரே நேரத்தில் நாட்டுக்குள் இறங்கிய அமெரிக்க ரஷ்ய,சீன முகங்களை பக்குவமாக வரவேற்று பக்குவமாக வழியனுப்பி வைக்கவேண்டிய கவலை அவர்களுக்கு இருக்கத்தான் செய்யும்.

**இல்லையென்றால் அவர்தான் திட்டித் தீர்பாரே?**

எது,எப்படியோ கடந்த நவம்பரில் இடம்பெற்ற தேர்தலில் 'ரேமினேற்றர்' கோட்டாபய ராஜபக்ஷ பெருவெற்றி பெற்று ஆட்சிக்கொலு ஏறியபின்னர் முதற்தடவையாக வெளிநாட்டுத்தலைகள் உள்ளூரில் முகாமிட்டிருப்பதால் இலங்கைக்கு இது ஒரு முக்கியமான வேளை.

ஆனால் வரும் முகங்கள் ஒன்றும் தேமேயென சும்மாவரவில்லை. இலங்கையை மையப்படுத்திய தமக்குரிய லாப நட்டக் கணக்குகளுடன்தான் ராஜதந்திர கணக்குகளையும் பார்க்க நினைக்கின்றன. இதில் தமிழ் அரசி



யல் தளத்தைப் பொறுத்தவரை அமெரிக்க ராஜாங்க முகமான அலிஸ் வெல்ஸ்தான் கொஞ்சம் ஈர்ப்புக்குரியவராகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இரா. சம்பந்தன் மேற்பார்த்த முகங்களை ஏறெடுத்து பார்த்துப் பேசியவராகவுமிருக்கிறார்.

மற்றப்படி சீன ரஷ்ய முகங்கள் கொழும்பு அதிகார மையத்தை மட்டுமே கணக்கில் எடுக்கும் முகங்கள் என்பது வெளிப்படை. இதில் ஒப்பீட்டு ரீதியில் ரஷ்யாவை விட சீனாதான் மீண்டும் ஒரு முறை கடன் உதவி என்ற கரட் துண்டை இலங்கைக்கு நீட்டியபடி செல்வதாகத் தெரிகின்றது.



அந்த வகையில் சீன வெளிவிவகார அமைச்சர் தனது இலங்கைப் பயணத்தின் சிறப்புப் பரிசாக வட்டிகுறைக்கப்பட்ட ஒரு பில்லியன் டொலர் கடன் தொகையை அறிவிக்கக்கூடும்.

இலங்கைத் தீவை பொறுத்தவரை தற்போது அதற்கு மொத்தமாக 52 பில்லியன்டொலர்வெளிநாட்டுக் கடன் உள்ளது. இதில் 6 பில்லியன் கடன் தொகை சீன.வழங்கியகடன்அதாவது இலங்கைத் தீவின் மொத்த வெளிநாட்டுக் கடனில் இது 11.5 வீதமானது.

ஆக மொத்தம் உலகம் முழுவதும் உள்ள கடற்பிராந்தியங்களில்தனது இருப்பை மேம்படுத்தத் திட்ட மிடும் சீனா அதற்குரிய வகை யில் தனது பட்டுப் பாதை கொள்கையை மையக்கொள்கையாகவும், முன்னணிக் கொள்கையாகவும் மாற்றி யமைக்கும் வகையில் நைச்சியமாக நகரும் நிலையில் இலங்கையும் அதில் ஒரு விட்டில் பூச்சி.

அனைத்து நாடுகளுக்கும் பயனளிக்கும் விதத்தில் தனது பட்டுப் பாதைத் திட்டத்தை செயல்படுத்துவதாக அடையாளப்படுத் தும் சீனா அந்தத் திட்டத்தின் பெயரைச் சொல்லி, வழங்கும் பணத்தை வட்டியும் முதலுமாக எடுக்க முயலும் என்பதும் வெளிப்படையானது.

இதனால் இலங்கைத் தீவு போன்ற நாடுகள் சீன முதலீட்டால் பிற உடனடி ஊக்கம் பெற்றாலும், நீண்டகால அடிப்படையில் அது ஆப்பைச் செருக்கக்கூடியது.

குறிப்பாக கொழும்பில் சீன முதலீட்டில் உருவாக்கப்படும் துறைமுக நகரம் சீனாவின் கடல் வழி பட்டுப்பாதையின் ஓர் அம்சமே. இதனால்தான் பாகிஸ்தான், மியான்மர், இலங்கை போன்ற நாடுகளுக்கு எறியப்படும் சீன முதலீடுகளை இந்தியப் பெரியண்ணன் தன்னையும் சுற்றிவளைக்கக் கூடிய ஒரு முத்துமாலையாக எச்சரிக்கையுடன் நோக்கிக்கொள்கின்றது.

இந்தியப் பெரியண்ணன் என்னதான் தனது சாகர் மாலா திட்டத்தின் ஊடாக 7000 கிலோ மீற்றர் கடல் எல்லையிலுள்ள 200 துறைமுகங்களை மேம்படுத்த முனைந்தாலும் ஒப்பீட்டு ரீதியில் சீன அரச தலைவர் ஜீ ஜின்பிங்கின் தனிப்பட்ட அரசியல் ஆர்வம் காரணமாக பட்டுப்பாதை திட்டம் சீன வெளியுறவுகொள்கைகளை வரையறுக்கும் அம்சமாக மாறிவிட்டதால் இலங்கை போன்ற நாடுகளும்



சிக்கிவிட்டன.

இப்போது நீங்கள் உங்கள் மனங்களில் இந்த வினாவை எழுப்பிப்பாருங்கள். இலங்கைத்தீவில் இன்று ஒரே நேர்கோட்டில் அமெரிக்கா,ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளின் முக்கிய முகங்கள் தென்பட்டமை அந்தத்தீவுக்கு கிரகணமா? பிரகாசமா? அநேகமாக விடையையும் உங்களால் ஓரளவு ஊகிக்கமுடியும்.

**நன்றி :- ஐ.பி.ஸி. தமிழ்**

# தமிழரைப் படுகொலை செய்பவர்களை விடுதலை செய்வோம் என்கிறதா அரசு?

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கேள்வி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 16

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ அதிகாரியை பொது மன்னிப்பில் விடுதலை செய்ததன் ஊடாக தமிழர்களைப் படுகொலை செய்பவர்களை நாம் விடுதலை செய்வோம் என்ற செய்தியை இலங்கை ராணுவத்துக்கு ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ வழங்கியுள்ள செயற்பாட்டை தாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்

யாழ் ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தான் ஜனாதிபதியாக வந்தால் சிறையில் உள்ள ராணுவத்தினரை விடுவிப்போம் எனத் தேர்தல் காலத்தில் கூறியிருந்தார்.அதேபோல் அண்மையில் 34 ராணுவ அதிகாரிகளைச் சிறையில் இருந்து பொது மன்னிப்பில் விடுதலை செய்துள்ளார்.அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் 8 தமிழர்களைக் கொடூரமாக சித்திரவதை செய்து படுகொலை செய்த குற்றச்சாட்டில் தூக்குத் தண்டனை பெற்ற சுனில் ரத்னாயக்க என்ற இராணுவ அதிகாரியை மன்னிப்பில் விடுதலை செய்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்தச் செயற்பாடு எமக்கு அதிர்ச்சியை தரவில்லை. ஏனெனில் சிங்களத் தலைவர்களின் மனநிலையில் எப்பபோதும் மாற்றம் ஏற்படாது.இதனை நாம் ஆரம்பத்தில் இருந்தே கூறி வருகின்றோம். முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா காலம் தொடக்கம் கோட்டாபாயவின் இந்த அரசு வரை தமிழ் மக்கள் மீதான மனோநிலையில் மாற்றம் எவையும் ஏற்படவில்லை. ஏற்படப்போவதும் இல்லை.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் மஹிந்த குடும்பத்திற்கும் விரோதம் இருந்தாலும் தமிழ் மக்கள் தொடர்பில் தமிழ் மக்கள் மீதான வன்முறைகள் தொடர்பில் ராணுவத்தைப் பாதுகாக்கவேண்டுமென்ற செயற்பட்டனர்.தற்போது கோட்டாபாயவும் அதன் தொடர்ச்சியாகச் சிறையில் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவத்தினரை விடுதலை செய்துள்ளார். இந்த செயற்பாடானது தமிழர்களைப் படுகொலை செய்பவர்களை நாம் விடுதலை செய்வோம் என்ற செய்தியை ராணுவத்திற்கு வழங்கியுள்ளது.இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப்போரின் போது மேற்கொள்ளப்பட்ட மனித படுகொலைகளுக்கு நீதி கோரி தமிழ் மக்கள் போராடி வருகின்றனர்.இந்த நிலையில் கடந்த காலங்களைப் போன்று வன்முறையைப் பிரயோகிக்க இந்த அரசும் ராணுவமும் எத்தனித்து வருகின்றது. இதனாலேயே நாம் உள்ளக விசாரணையில் எமக்கு நீதி கிடைக்காது என்பதை கூறுவதுடன் சர்வதேச விசாரணை ஊடாக நாம் போர்க்குற்ற விசாரணைகள் நடத்தப்பட்டுச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் எனக் கோரி வருகின்றோம்

உள்ளக விசாரணையில் எமக்கு நம்பிக்கையில்லை சர்வதேச விசாரணையே வேண்டும் என நாம் வலியுறுத்தி வந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாவை சேனாதிராசா, சுமந்திரன் ஆகியோர் 2013ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து உள்ளக விசாரணையில் தமக்கு நம்பிக்கை உள்ளது எனக் கூறி கால அவகாசம் வழங்கி தொடர்ச்சியாக இலங்கையைச் சர்வதேசத்திடம் இருந்து காப்பாற்றி வருகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் போட்ட பிச்சையினாலேயே தற்போது கோட்டாபய ஜனாதிபதியாகியுள்ளார். ஏனெனில் சர்வதேச விசாரணை வேண்டாம் உள்ளக விசாரணையே வேண்டும் அதில் நமிபிக்கை உள்ளது எனப் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபயவை காப்பாற்றியதன் விளைவே தற்போது அவர் மீண்டும் அதிகாரத்துக்கு வந்துள்ளார்.

ராணுவத்தினரை விடுதலை செய்து வரும் இந்த அரசும் கடந்தகால அரசைப் போன்ற செயற்பட்டு வருகின்றது. சந்திரிகா காலத்திலிருந்து கோட்டாபய ஆட்சி வரை அரசியல் கைதிகள் தொடர்பில் எவ்வித அக்கறையும் கொண்டதாக இல்லை. நாம் எமக்கான நீதியை சர்வதேசத்தினை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும் – என்றார்.

(ஐ – 07)

## புலனாய்வுத்துறையை ஒழுங்குபடுத்த வருகின்றது அரச புலனாய்வுச் சட்டம்

கொழும்பு, ஜன. 16

நாட்டின் புலனாய்வுத் துறையைச் சுயாதீனமான அதிகாரமுடைய அமைப்பாக ஒழுங்குபடுத்துவதற்கு வசதியாக அரச புலனாய்வு சட்டத்தை உருவாக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஜனாதிபதிகோட்டாபயராஜபக்ஷவால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைச்சரவை நேற்று முன்தினம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்தத் தகவலை அமைச்சரவை இணைப் பேச்சாளர் நேற்று வெளியிட்டார். இதன்மூலம் அரச புலனாய்வு சட்டவரைவைத் தயாரிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ்ப்பாணத்தில் நேற்று கோலாகலப் பொங்கல்







*யாழ்ப்பாணம், ஜன. 16*

*தமிழர் திருநாளாம் தை முதல் நாளான பொங்கல் பண்டிகை யாழ்ப்பாணத்தில் நேற்று புதன்கிழமைஉற்சாகமாககொண்டாடப்பட்டது.*

*பண்பாடு, கலாசாரம் மற்றும் விவசாயத்தை போற்றும் வகையில் தமிழர்கள் வாழும் இடமெங்கும் பொங்கல் பண்டிகை ஆண்டுதோறும் தை மாதத்தின் முதல் நாள் வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது.*

*உயிர்கள் வாழ ஆதாரமாக விளங்கும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, புதுப் பானையில், புத்த ரிசிப் பொங்கலிட்டு, பாரம்பரிய புத்தாடை உடுத்தி மக் கள் அனைவரும் மகிழ்ச்சி பொங்கக் கொண்டாடினர்.*

*வீடுகளில் அலங்காரத் தோரணங்களைக் கட்டியும், வண்ணக் கோலமிட்டும் கோலாகலமாகவும், உற்சாகமாகவும் உறவினர்கள், நண்பர்கள் சூழ இணைந்து கொண்டாடினர்.*

*(ஐ - 07)*

## மிருசுவில் படுகொலையாளிக்கு மன்னிப்பு வழங்கப்படவில்லை!

கொழும்பு, ஜன. 16

மிருசுவில் பகுதியில் 2000ஆம் ஆண்டு தமிழர்கள் எட்டுப் பேரை வெட்டிப் படுகொலை செய்த வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ முன்னாள் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படவில்லை என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுனில் ரத்னாயக்க பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்படவுள்ளார் என்று செய்திகள் வெளியானபோது அதனை ஊடகப் பிரிவு மறுத்திருந்தது. இந்நிலையில் அவர் பொதுமன்னிப்பின் விடுதலை செய்யப்பட்டார் என செய்திகள் வெளியாகியிருந்தன. எனினும் தமிழ் ஊடகப் பிரதானிகளுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது இந்த மரண தண்டனை கைதி விடுதலை செய்யப்படவில்லை என்று மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(ஐ)

## பெற்ற கடனைத் திருப்ப செலுத்த முடியாதவர்களுக்கு நிவாரணம்

கொழும்பு, ஜன. 16

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் கடன் பெற்றவர்களுக்கான கடன் நிவாரணப் பொதித் திட்டத்தை செயல்படுத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி வரை கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கு கடன் நிவாரணப் பொதியை வழங்க பிரதமர் மஹிந்த முன்வைத்த திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

அவர்களின் சொத்துக்களை ஏலம் விடக்கூடாது என்றும் சட்ட நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடன்தகவல்பணியகத்திற்குவருகை தரும் வணிகங்களுக்கு வட்டி வீதத்தைக் கழிக்கவும், மூலதனத்தைப் பெறக் கூடுதல் கடனைப் பெறவும் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

இதற்கிடையில், சிறப்பாக செயல்படும் வணிகர்களுக்கு 30 கோடி ரூபா வரை கூடுதல் கடனும் 10 சதவீத வட்டி வீதமும் வழங்கப்படும்.

இந்த நிவாரணம் அனைத்து அரசு மற்றும் தனியார் வங்கிகள் மூலமாகவும் செயற்படுத்தப்படுகின்றது.

(ஐ)

northern PC PARK

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park | 077 757 0124 | 021 567 5566
NPcpark | 077 336 6443 | 021 222 9581
northernpcpark | 075 555 7327 | 021 222 2050
Northern PC Park | 071 777 2377 | 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

# யார் வற்புறுத்தினாலும் ஓய்வு பெறமாட்டேன்

யார் வற்புறுத்தினாலும் ஓய்வு பெறமாட்டேன் என பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளரான மஷ்ரபீ மோர்டாசா கூறியுள்ளார்.

36 வயதான மஷ்ரபீ மோர்டாசா, இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருடன் ஓய்வுப் பெறபோவதாக அறிவித்தார்.

எனினும், தீடிரென மனம் மாறிய மஷ்ரபீ மோர்டாசா, தனது ஓய்வு அறிவிப்பினை மீளப் பெற்றுக் கொண்டார். இதனால் மஷ்ரபீ மோர்டாசா பலராலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து அணியிலிருந்தும் சமீபகாலமாக ஓரங்கட்டப்பட்டுவரும் மஷ்ரபீ மோர்டாசாவை, பங்களாதேஷ் அணி வீரர்களுக்கான



ஒப்பந்தத்தில் இருந்தும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை நீக்கியது.

அத்தோடு, அவரை கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுப் பெறுமாறு வற்புறுத்தப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இந்த நிலையில் யார் வற்புறுத்தினாலும் ஓய்வு பெறமாட்டேன் என மஷ்ரபீ மோர்டாசா கூறியுள்ளார்.

மோர்டசா தனது எதிர்காலம் குறித்து கூறுகையில் நான் கிரிக்கெட் வாழ்க்கை குறித்து முடிவு எடுப்பது என்னுடைய சொந்த விடயமாகும். நான் தேசிய அணிக்காக விளையாட விரும்புகிறேன் என்று எப்போது கூறினேன். என்னுடைய தேசிய ஒப்பந்தம் முடிவடைந்து விட்டது. தற்போது நான் அதில் இல்லை.

கிரிக்கெட் சபை என்னை தலைவராக வைத்திருக்குமா?. அணியில் சேர்க்குமா? என்பது குறித்து நான் சிந்திக்கவில்லை. தேர்வுக்குழு என்ன நினைக்கிறதோ அதை செய்யட்டும். கிரிக்கெட் சபை என்னை அணித்தலைவர் பதவியில் இருந்து விலகச் சொன்றால், உடனடியாக அதை செய்வேன்.

என்னுடைய பிரியாவிடை போட்டி குறித்து நான் சிந்திக்க நேரம் இருக்கிறது. அதற்கான அவசியம் இருப்பதாக நினைக்கவில்லை. சில வீரர்கள் சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கும்போது கிரிக்கெட் வாழ்க்கையை முடித்துக் கொள்ள விரும்புவார்கள். ஏனென்றால் அவர்கள் மகிழ்ச்சியுடன் விளையாடுகிறார்கள்.

அது தேசிய அணியாக இருக்கலாம். அல்லது மற்ற இடங்களில் விளையாடும் போட்டியாக இருக்கலாம். வீரர்கள் தேசிய அணிக்காக மட்டுமே விளையாட வேண்டும் என நினைப்பதில்லை. நான் கிரிக்கெட் விளையாட விரும்புகிறேன். அது டாக்கா லீக்காக இருக்கலாம். தற்போது மகிழ்ச்சியாக விளையாடி கொண்டிருக்கிறேன். நான் எங்கே விளையாட விரும்புகிறேன் என்ற முடிவை எடுக்க முழு சுதந்திரம் உள்ளது. யார் வற்புறுத்தினாலும் நான் ஓய்வு பெறமாட்டேன் என கூறினார்.

மேலும், மோர்டசா எதிர்காலம் குறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைவர் நஸ்முல் ஹசன் கூறுகையில், மோர்டசா எங்களிடம் தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி வீரர்களுக்கான தேசிய ஒப்பந்தத்தில் இருக்க விருப்பம் இல்லை என்றார். இளம் வீரர்களுக்கு வாய்ப்பு கொடுக்க விரும்பினார். அவருக்கு நாங்கள் பிரியாவிடை கொடுக்க விரும்பினோம். தற்போது அதில் அவருக்கு ஆர்வம் இல்லாமல் இருக்கிறது. அவர் தொடர்ந்து விளையாட விரும்புகிறார். அதற்கு அர்த்தம் உள்ளூர் கிரிக்கெட்டாகக் கூட இருக்கலாம்.

இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ண தொடரின்போது, டாக்காவில் உங்களுக்கு பிரியாவிடை போட்டி நடத்த விரும்புகிறோம் என்று கூறினேன். ஆனால், தற்போது அவர் என்ன நிலையில் இருக்கிறார் என்பதை தெளிவாக தெரிந்து கொள்ள அவரிடம் பேச வேண்டியுள்ளது என கூறினார்.

வலக் கை வேகப்பந்து வீச்சாளரான மஷ்ரபீ மோர்டாசா இதுவரை 217 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 266 விக்கெட்டுகளையும், 36 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 78 விக்கெட்டுகளையும், 54 ரி-20 போட்டிகளில் விளையாடி 42 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மஷ்ரபீ மோர்டாசா தலைமையில், இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடருக்குள் நுழைந்த பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, லீக் சுற்றுகளுடன் வெளியேறியது மட்டுமல்லாமல், புள்ளிப் பட்டியலிலும் 8ஆவது இடம் பிடித்தது. தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுடன் மட்டுமே வெற்றிபெற்றது.

# வரலாற்று வெற்றியை பதிவு செய்தது ஆஸி.

இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் டேவிட் வோர்னர் மற்றும் பிஞ்ச்



ஆகியோரின் அதிரடி ஆட்டம் காரணமாக ஆஸ்திரேலியா அணி எந்தவித விக்கெட் இழப்பும் இன்றி வெற்றிபெற்றுள்ளது.

மும்பாய் வான்கடே மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற ஆஸ்திரேலியா அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்பிரகாரம் முதலில் களமிறங்கிய இந்திய அணி 49.1 ஓவர்களுக்குள் அனைத்து விக்கெட்களையும் இழந்து 255 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இந்திய அணி சார்பாக ஷிகர் தவான் 74 ஓட்டங்களையும் லோகேஷ் ராகுல் 47 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் மிட்செல் ஸ்டார்க் 3விக்கெட்களையும் பட்கம்மின்ஸ் மற்றும் கேன் ரிச்சர்ட்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

இதனை அடுத்து 256 ஓட்டங்களைப் பெற்றுக்கொண் டால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு களமிறங்கிய ஆஸ்திரேலியா அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களின் அதிரடி சதம் மூலம் 37.4 ஓவர்களில் எந்த விக்கெட் இழப்பும் இன்றி வெற்றி இலக்கை கடந்தது.

ஆஸ்திரேலியா அணி சார்பாக டேவிட் வோர்னர் 128 ஓட்டங்களையும் அணித்தலைவர்




ஆரோன் பிஞ்ச் 110 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

எனவே 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆஸ்திரேலியா அணி 1–0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

# காட்டுத் தீ காரணமாக கைவிடப்பட்டது முக்கிய போட்டி!



காட்டுத் தீயால் உருவாகியுள்ள மோசமான புகைமண்டலத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மெல்போர்னில் இடம்பெற்றுவரும் ஆஸ்திரேலிய ஓபன் ரெனிஸ் தொடரின் நடுவில் இருமலால் பாதிக்கப்பட்ட வீராங்கனை ஒருவர் போட்டியிலிருந்து விலகியுள்ளார்.

சுவிஸ் வீராங்கனைக்கு எதிராக விளையாடிக்கொண்டிருந்த ஸ்லோவேனிய வீராங்கனை டலியா ஜகுபொவிக் தீடீர் என நிலத்தில் விழுந்து பலமாக இரும ஆரம்பித்துள்ளார்.

அதன் பின்னர் அவருடன் உரையாடிய நடுவரும் அதிகாரிகளும் அவரை அங்கிருந்து அழைத்துச் சென்றதுடன் போட்டி கைவிடப்பட்டது.

என்னால் நடக்க முடியவில்லை. நான் நிலத்தில் விழுந்து விடுவேனோ என அஞ்சினேன் என அவர் தெரிவித்துள்ளார்.

எனக்கு அஸ்மா பிரச்சினையோ சுவாசப் பிரச்சினையோ இல்லை எனக்குறிப்பிட்டுள்ள அவர், என்னால் சுவாசிக்க முடியாத நிலையேற்பட்டது. அதனால் நிலத்தில் விழுந்தேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தான் சென்று விளையாட பங்களாதேஷ் அணி சம்மதம்!

பாகிஸ்தான் சென்று விளையாட மறுத்துவந்த பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, தற்போது அங்கு சென்று விளையாட சம்மதம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னதாக, பாகிஸ்தான் மண்ணில் ரி –20 தொடரில் விளையாடுவதற்கு மட்டும் சம்மதம் தெரிவித்து, டெஸ்ட் தொடரை பொதுவான இடத்தில் நடத்த பங்களாதேஷ் கிரிக்கெட் சபை வேண்டுக்கோள் விடுத்தது.

இதனால் இந்த தொடரை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, தீர ஆலோசித்துக் கொண்டிருந்தது.

இந்த நிலையில் இந்த ஒட்டுமொத்த தொடரையும் பாகிஸ்தான் மண்ணில் நடத்துவதற்கு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை விருப்பம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் பங்களாதேஷ் அணி பாகிஸ்தான் சென்று இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட இருந்தது.

பங்களாதேஷ் அணி எப்படியும் பாகிஸ்தான் வரும் என்று நம்பியிருந்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, ஒரு போட்டியை பகல் – இரவு டெஸ்டாக நடத்த விரும்பியது. இதற்கு சம்மதிக்கும்படி பங்களாதேஷிற்கு வேண்டுகோளும் விடுத்தது.

எனினும், பாதுகாப்பு காரணத்திற்காக பங்களாதேஷ் அணி, இரண்டு டெஸ்ட் போட்டியிலும் இடைவெளிவிட்டு விளையாடுகிறது.

இதன்படி, இந்த மாத இறுதியில் பாகிஸ்தான் செல்லவுள்ள பங்களாதேஷ் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடர், ஒரேயொரு டெஸ்ட் போட்டியில் விளையாடுகின்றது.

எனினும், இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும், ஒரேயொரு ஒருநாள் போட்டியிலும் ஏப்ரல் மாதம் விளையாடுகின்றது.

இந்த நிலையில் இத்தொடருக்கான போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த சுற்றுப்பயணத்தின் போது, முதலாவதாக நடைபெறும் மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரின் முதல் போட்டி, எதிர்வரும் 24ஆம் திகதி லாகூர் மைதானத்தில் நடைபெறுகின்றது.

இரண்டாவது ரி – 20 போட்டி 25ஆம் திகதியும், மூன்றாவது ரி – 20 போட்டி 27ஆம் திகதியும், லாகூர் மைதானத்தில் நடைபெறுகின்றன.

முதலாவது டெஸ்ட் போட்டி, பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி ராவல்பிண்டி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதன்பிறகு ஒரேயொரு ஒருநாள் போட்டி, ஏப்ரல் மாதம் 3ஆம் திகதியும், இரண்டாவது டெஸ்ட் போட்டி ஏப்ரல் மாதம் 5ஆம் திகதியும் கராச்சி மைதானத்தில் நடைபெறவுள்ளது.



இவ்வாறு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை, தங்கள் மண்ணில் விளையாடுவதை எண்ணி பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மகிழ்ச்சி வெளியிட்டுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தில் இலங்கை அணி வீரர்கள் சென்ற பேருந்து மீது துப்பாக்கிதாரிகள் நடத்திய தாக்குதலில் ஆறு வீரர்கள் காயமடைந்தனர். இந்த சம்பவத்தில் ஆறு பாகிஸ்தான் பொலிஸார் மற்றும் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இதனால், பாகிஸ்தானிற்கு சென்று விளையாட சர்வதேச அணிகள் தயக்கம் காட்டின. ஆனாலும் பாகிஸ்தான் சொந்த மண்ணில் கிரிக்கெட் தொடர்களை நடத்துவதற்கு கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரிலும் பொங்கல்



மன்னார், ஜன. 16

மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்களும் தைப் பொங்கல் பண்டிகையை மிகவும் சிறப்பாகக் கொண்டாடியுள்ளனர்.

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து கத்தோலிக்கத் தேவாலயங்களிலும் தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டதோடு, விசேட திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் நேற்று புதன்கிழமை காலை 5.30 மணியளவில், பேராலய பங்குத்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில், இறைவன் அழித்த கொடைகளுக்கு நன்றி தெரிவித்து பொங்கல் பொங்கி விசேட திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இந்த பொங்கல் நிகழ்வானது மறைமாவட்டத்தில் உள்ள இளைஞர், யுவதிகளின் பங்கு பற்றுதலுடன் இடம் பெற்றது. மேலும் மாவட்டத்தில் உள்ள ஆலஙய்களிலும் விசேட பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், மன்னார் பஸார் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவும் பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மக்களை ஏமாற்றும் கோட்டாபய அரசு!

## சாடுகின்றது ஐ.தே.க.

கொழும்பு, ஜன. 16

நாட்டு மக்களை ஏமாற்றும் வகையிலான செயற்பாடுகளையே அரசு மேற்கொண்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்தன இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புதிய அரசு ஆட்சிக்கு வந்து 58 நாள்கள் கடந்துள்ள போதிலும், எத்தகைய அபிவிருத்தி திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை என்பதுடன், நாட்டு மக்களை ஏமாற்றும் வகையிலான செயற்பாடுகளையே அரசு மேற்கொண்டு வருகின்றது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை இன்றி ஆட்சி அமைக்க முடியாது என்று அரச தரப்பினர் கூறிக்கொள்ளும் நிலையில் 42 உறுப்பினர்களுடன் ஆட்சி அமைத்த கடந்த அரசு 100 நாள்திட்டம்உள்ளிட்டபாரியஅபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள முடியாமையை நினைவில் கொள்ள வேண்டும் – என்றார்.

# வாகனத்தை பந்தாடிய ரயில்! இருவர் அதே இடத்தில் சாவு!!



கொழும்பு, ஜன. 16

காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்குச் சென்ற வாகனமொன்றை ரயில் மோதித் தள்ளியதில் இருவர் உயிரிழந்தனர். கொங்கம்போ – கோட்டை ரயில் கடவையில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் அனுஷ்கா சமன் குமாரி தென்னக்கோன் (வயது – 27), பிரபாத் தென்னக்கோன் (வயது – 25) ஆகியோர் உயிரிழந்தனர்.

அவர்கள் பயணித்த வாகனம் முற்றாகச் சிதைந்துள்ளது. (ஐ)

# மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் விசேட பொங்கல் வழிபாடு





உழவர் திருநாளாம் தைத்திருநாளை முன்னிட்டு நேற்று நாடளாவிய ரீதியில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் தைத்திருநாளை முன்னிட்டு விசேட பொங்கல் வழிபாடுகள் நடைபெற்றன.

ஆலயத்தில் நேற்று புதன்கிழமை காலை விசேட அபிசேக ஆராதனைகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து சூரிய பகவானுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஆலய முன்றிலில் பொங்கல் பொங்கி படைக்கப்பட்டு, சூரிய பகவானுக்கு விசேட பூஜைகள் நடைபெற்றன.

நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நல்லாசிவேண்டியும் விவசாயிகள் சிறந்த விளைச்சலைப் பெறவேண்டியும் மாமாங்கேஸ்வரருக்கு பூஜைகளும் பிரார்த்தனைகளும் செய்யப்பட்டன.

நேற்றைய தைத்திருநாள் விசேட பொங்கல் பூஜையில் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டதுடன் பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டனர்.

# தமிழரசின் பொங்கல்



கிளிநொச்சி, ஜன. 16

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நிகழ்வு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் விமரிசையாகக் கொண்டாப்பட்டது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்றுப் புதன்கிழமை காலை பொங்கல் பொங்கி தைத்திருநாள் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தலைமையில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வில் கட்சி முக்கியஸ்தர்கள், அமைப்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மதங்களைக் கடந்து வவுனியாவில் சிறப்பாக இடம்பெற்ற பொங்கல்







வவுனியா, ஜன. 16

மத வேறுபாடுகள் இன்றி வவுனியாவில் உழவர் திருநாளான தைப்பொங்கல் நிகழ்வுகள் நேற்றுச் சிறப்பாக இடம் பெற்றன.

இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள் எனப் பரவலாகப் பொங்கல் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

வவுனியாவின் சிறப்பு வாய்ந்த ஆலயமான கந்தசுாமி ஆலயத்தில் ஆலயத்தின் பிரதமகுரு உமாசுதக் குருக் கள் தலைமையில்பொங்கல் இடம்பெற்று விசேட அபிசேகம் மற்றும் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

அத்துடன் இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்தில் ஆலயப் பங்கு தந்தை அருட்பணி ஜெயபாலன் தலைமையில் பொங்கல் இடம்பெற்றதுடன் விசேட திருப்பலியும் நடைபெற்றது. இதன்போது மக்கள் பலரும் கலந்து கொண்டு பொங்கல் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டதுடன் வழிபாட்டிலும் ஈடுபட்டனர். இதுதவிர, வர்த்தக நிலையங்கள், வீடுகளிலும் பட்டாசு முழங்கப் பொங்கல் நிகழ்வுகள் சிறப்பாக இடம் பெற்றிருந்தன. (ஐ – 100)



# 19ஆவது திருத்தத்த மாற்றாமல் நாட்டை முன்னேற்ற முடியாது

## வியத்மக அமைப்பு கூறுகிறது

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை முழுமையாக மாற்றியமைக்காமல் நாட்டை முன்னேற்ற முடியாது என வியத்மக அமைப்பின் உறுப்பினர் பேராசிரியர் நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடு பொருளாதார, சமூக நெருக்கடியை எதிர்கொண்டிருந்தது.

ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் பொருளாதார நிலைமை வீழ்ச்சியடைந்த நிலையில் இருந்தன. இதற்கு கடந்த அரசின் முறையற்ற பொருளாதார நிலைமைகளே இதற்குப் பிரதான காரணியாக காணப்பட்டன.

தேசிய பொருளாதாரம் மேம்படுத்த வேண்டுமாயின் தேசிய உற்பத்தியாளர்கள் பாதுகாக்கப்பட்டு உற்பத்தி துறையில் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

கடந்த அரசு இறக்குமதியிலே அதிகளவில் தங்கியிருந்தது. தேசிய உற்பத்தியாளர்களுக்கு எவ்வித சலுகைகளும் வழங்கப்படவில்லை. இதனால் தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.

தேசிய உற்பத்திகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய குறிப்பிட்டுள்ளார். இவரது பணிப்புரைக்கு அமைய உற்பத்தியாளர்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இவை இன்று தேசிய உற்பத்தியாளர்களுக்கு பல்வேறு விதத்தில் நன்மை பயக்கின்றன.

ஜனாதிபதி கோட்டாபயவின் கொள்கைத் திட்டங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குச் சாத்தியமானதாகக் காணப்படுகின்றது. இவரது கொள்கைகளைச் செயற்படுத்தும் பலமான நாடாளுமன்றம் தோற்றம் பெற வேண்டும்.

அதிகாரப் போட்டியைத் தோற்றுவித்துள்ள அரசமைப்பின் 19ஆவது திருத்தம் முழுமையாக மாற்றியமைப்பது பிரதான காரணியாகும். ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து செயற்பட்டால் மாத்திரமே நாடு முன்னேற்றமடையும்.

அனைத்திற்கும் தடையாகவுள்ள 19 ஆவது திருத்தம் பெரும்பான்மை பலத்துடன் மாற்றியமைக்கப்படும். என்பதில் உறுதியாக உள்ளோம்.

மக்களை மையப்படுத்திய பொருளாதார கேந்திரம் தோற்றம் பெற வேண்டுமாயின் மக்களுக்கு பயன் தரும் அரசியலமைப்பு தோற்றுவிக்கப்பட வேண்டும் – என்றார். (ஐ)

# எனது பெறுமதியை கட்சி பின்னர் உணரும்

## கூறுகின்றார் ரஞ்சன்



கொழும்பு, ஜன. 16

ஐக்கிய தேசியக்கட்சி, எனது பெறுமதியை மிக விரைவில் கட்சி உணருமென நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்க கைதாகின்றமைக்கு முன்னர் சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து தன்னை விலக்குவதற்கு எடுத்துள்ள தீர்மானத்துக்கு நான் தலை வணங்குகிறேன்.

நான் சுதந்திரமாகக் கருத்துத் தெரிவிக்கும் ஒருவன். எனவே கட்சியொன்றில் தொடர்ந்து இருக்கின்றமை சிரமமானது.

அத்துடன் கட்சியிலிருந்து விலக்கியமைக்காக கட்சிக்கு சேறு அடிக்கும் நடவடிக்கையில் நான் ஒருபோதும் ஈடுபடமாட்டேன்.

நான் சுயாதீனமாக தேர்தலில் போட்டியிடுவேன். வெற்றியடைந்தால் நாடாளுமன்றம் செல்வேன். தோல்வியடைந்தால் சினிமாத்துறைக்குச் செல்வேன்.

இன்னும் எந்தக் கட்சியென்று தீர்மானிக்கவில்லை. நான் கட்சிக்காக நிறைய பணியாற்றியுள்ளேன். எனது பெறுமதியை கட்சி பின்னர் உணரும் – என்றார். (ஐ)


விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத்தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுத்துப்பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.

THE SASIKA LEARNERS

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.



வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

சசிகா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

தலைமைக் காரியாலயம், இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOTLINE: 077 722 6247
0212217678,
0776140361
sasika Learners
sasika driving Schoolgmail.com.

கிளை நிறுவனங்கள்:

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
0212215472
0703013012

காரைநகர்
021 225 2454,
070 510 2484

கே.கே.எஸ். வீதி, மல்லாகம்
021224 3393
0703013014

பண்டத்தரிப்பு
021 225 2333,
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021225 1664
0703013016

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
0212215472
0703013012

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் குளத்தில் மூழ்கி பரிதாபமாக சாவு

புத்தளம், ஜன. 16

புத்தளம், வண்ணாத்திவில்லு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறால்மடு ஆற்றில் குளிக்கச்சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நீரில் மூழ்கிப் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தில் 36 வயதுடைய தாயும், அவரது 17 வயதுடைய மகனும், 19 வயதுடைய மகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்தவர்கள் கண்டி அலவத்துகொடை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் ஒரு மாதத்திற்கு முன்னர் வண்ணாத்திவில்லு இறால்மடு பிரதேசத்தில் அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான காணி ஒன்றில் பணியாற்றுவதற்காக வந்திருந்தவர்கள் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதில் உயிரிழந்தவர்கள் வீரன் காயம்பு சந்திராகுமாரி (வயது 36), எஸ். சுபாசினி (வயது 19) மற்றும் கிருஸ்ண குமார் (வயது 17) என்றும் பொலிஸார் அடையாளம் கண்டுகொண்டுள்ளனர்.

நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களின் சடலங்கள் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பாக வண்ணாத்திவில்லு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# விளக்கமறியலில் ரஞ்சன் எம்.பி.

கொழும்பு, ஜன. 16

முன்னாள் இராஜாங்க அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சன் ராமநாயக்கவை வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நுகேகொடை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் பொலிஸ், குற்ற விசாரணைப் பிரிவு மற்றும் நீதித்துறை ஆகியவற்றில் தலையீடு செய்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க மீது தற்போதைய அரசால் குற்றஞ்சாட்டப்பட்டது.

தலையீடுகள் தொடர்பில் பொலிஸ் அதிகாரிகள், நீதிபதியுடன் அவர் தொலைபேசியில் உரையாடிய ஒலிப்பதிவுகள் அவரது வீட்டிலிருந்து மீட்கப்பட்டன. அந்த ஒலிப்பதிவுகள் தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அந்த விசாரணைகளின் அடிப்படையில் நீதிபதிகளுடன் தலையீடு செய்தார் என்ற குற்றச்சாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு சட்ட மா அதிபர், கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுக்கு நேற்று முன் தினம் மாலை அறிவுறுத்தல் வழங்கினார்.

அதனடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து ரஞ்சன் ராமநாயக்க நேற்று முன்தினம் மாலை கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் நேற்று பிற்பகல் நுகேகொடை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதன்போதே அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ - 100)

# மனித உரிமைகளுக்கு இலங்கையில் ஆபத்து

## எச்சரிக்கிறது அதன் கண்காணிப்பகம்

கொழும்பு, ஜன. 16

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் இலங்கையில் மனித உரிமைகளுக்கு கடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

2019 இல் சர்வதேச மனித உரிமை நிலவரம் தொடர்பான தனது ஆண்டு அறிக்கையிலேயே சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் இதனைத் தெரிவித்துள்ளது.

இலங்கை கடந்த சில வருடங்களில் அடிப்படை உரிமைகளை மீள ஏற்படுத்துவது ஜனநாயக ஸ்தாபனங்களை மீள கட்டியெழுப்புவதில் உருவாக்கிய முன்னேற்றங்கள் ஒரு பழிவாங்கல்களுடன் இல்லாமல் செய்யப்படலாம் என நிலவுகின்ற அச்சத்துக்கு உரிய காரணங்கள் உள்ளன என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தென்னாசியப் பணிப்பாளர் இயக்குநர் மீனாட்ஷி கங்குலி தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி கடந்த காலத் துஷ்பிரயோகங்களை துடைத்தெறியும் நோக்கத்துடன் உள்ளதுடன் எதிர்காலத் துஷ்பிரயோகங்களுக்கான வழியை ஏற்படுத்த முனைகின்றார் என மீனாக்ஷி கங்குலி சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே சர்வதேசக் குற்றங்களை மூடி மறைக்க முடியாது என்பதைக் கரிசனையுள்ள அரசுகள் தெரியப்படுத்தவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2009 இல் முடிவுக்கு வந்த இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான உள்நாட்டு யுத்தத்தின்போது இடம்பெற்ற துஷ்பிரயோகங்களுக்கு தீர்வை காண்பதில் முன்னைய மைத்திரிபால சிறிசேன அரசில் சிறிதளவு முன்னேற்றம் காணப்பட்டது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு வாக்குறுதிகளை மதிக்கப்போவதில்லை என்பதை இந்த புதிய அரசு வெளிப்படுத்தியுள்ளது எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# தேர்தல் சின்னம் தொடர்பில் சு.க. இன்னும் முடிவில்லை

## தெரிவித்தார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, ஜன. 16

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி – ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூட்டணியின் தேர்தல் சின்னம் தொடர்பாக இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த அவர், ஜனாதிபதி – பிரதமர் உள்ளிட்ட தரப்பினர் இந்த விடயத்தைப் புரிந்துணர்வு அடிப்படையில் அணுகவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணியுடன் தேர்தலில் களமிறங்கும்போது, கதிரைச் சின்னத்தையும் வெற்றிலைச் சின்னத்தையும் தான் பயன்படுத்தியுள்ளது.



எமது கட்சியின் சின்னத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில்தான் இந்த முடிவுகளை நாம் கடந்த காலங்களில் எடுத்திருந்தோம்.

இந்த நிலையில், எதிர்வரும் பொதுத் தேர்தலில் எந்தச் சின்னத்தில் களமிறங்குவது என்பது தொடர்பாக பேச்சுக்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், சுதந்திரக் கட்சி – ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூட்டணியின் பொதுச் சின்னம் மொட்டாக இருக்குமானால், பொதுஜன பெரமுனவின் சின்னமாக மொட்டு இருக்க முடியாது என்பதுதான் எமது நிலைப்பாடாக இருக்கிறது.

அவர்கள் கதிரைச் சின்னத்தையோ அல்லது வேறு சின்னத்தையோதான் பயன்படுத்த முடியும். எனினும். இதுவரை நாம் இதுதொடர்பாக எந்தவொரு பேச்சும் நடத்தவில்லை. ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கட்சித் தலைவர்களுடன் நாம் இந்த விடயம் தொடர்பாகக் கலந்தாலோசிப்போம்.

இதில் ஒரு புரிந்துணர்வு ஏற்பட்ட பின்னர்தான் அடுத்தக்கட்டத்தை யோசிக்கலாம். கூட்டணியின் சின்னமாக தாமரை மொட்டு இறுதி செய்யப்பட்டால், பொதுஜன பெரமுனவின் சின்னம்தான் இல்லாது போகும். இது எமது பிரச்சினையல்ல – என்றார்.

# சு.க. மத்தியகுழு கூட்டம் இன்று!

கொழும்பு, ஜன. 16

இலங்கை சுதந்திரக் கட்சியின் மத்திய குழு இன்று வியாழக்கிழமை கட்சித் தலைமையகத்தில், கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடுகிறது.

தற்போதைய அரசியல் நிலைமை, கட்சியின் எதிர்கால பாதை மற்றும் அடுத்த பொதுத் தேர்தலில் ஸ்ரீ.ல.சு.க. எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்து கட்சி விவாதிக்கும் என்று கட்சியின் செய்தித் தொடர்பாளர் வீரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

பொதுத் தேர்தலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆணையை வலுப்படுத்துவது குறித்து விவாதங்கள் நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்

# மின்வெட்டை எதிர்கொள்ள நேரிடலாமென எச்சரிக்கை!

கொழும்பு, ஜன. 16

போதியளவான மழைவீழ்ச்சி கிடைக்காவிடின் மின்வெட்டை எதிர்கொள்ள நேரிடலாமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மின்சாரப் பொறியியலாளர் சங்கத்தால் அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் வரை போதியளவான மழை வீழ்ச்சி கிடைக்காவிடின் இந்த நிலை ஏற்படும் என மின்சார பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இப்பிரச்சினைக்கு முகங்கொடுக்க முன்னர், அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

இதற்கான மாற்று வழியாக தனியார் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து போட்டிவிலைக்கு மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய முடியுமெனவும் சங்கத்தின் தலைவர் அநுருத்த திலகரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதற்கான நீண்டகாலத் தீர்வாக மிகப் பெரியளவிலான மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கநடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் கூறினார். (ஐ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.



20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிடெட்

இல.10, மாநகர சபை புதிய கடைத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.01.2020 இல் வெளியிடப்பெற்றது.